சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ

101. ராமனுக்கு ராவணன் புகழ்மாலை

ராவணனே ராமனுக்குப் புகழ் மாலை சூட்டுகிறானென்றால், அது யாரும் எதிர் பார்த்திருக்க முடியாத நிகழ்ச்சியாகத் தானே இருக்க வேண்டும்! எனினும், இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அற்புதக் கற்பனையைத் துணிந்து செய்து பார்க்கிறது கவிஞன் மேதை.

தொடுக்கும் மாலை

'ஒருபோதும் வாடிப் போகாத தவ வலிமை யுள்ள என் அப்பனே! நடந்த தென்ன?' என்று பாட்டன் கொஞ்சிக் கேட்பது போலக் கேட்கிறான். ராவணனே உமிழ்நீர் வறண்ட நாவால் மாலியவான் பிரமிக்கும்படி ராமபாண ஸ்தோத்திரம் செய்கிறான். ஒரு பெரிய வீரப் புகழ் மாலை சூட்டுகிறான் ராமனுக்கு.

எப்படியாவது பேரன் பிழைத்துக் கிடக்க வேணும், அதற்காகவாவது வழிப்பட வேணும் இந்தச் செருக்கன் என்பது பாட்டன் ஆசை. ஆனால் இது வரை ராவணனிடம் பேச்சுக் கொடுத்தது ஒன்றும் மாலியவானுக்கு நம்பிக்கை அளித்ததில்லையே.

இப்போதோ ராவணனே ராமனுக்கு, பூமாலை வாடுமென்று பாமாலை சூட்டுவது போல் அந்தப் புகழைப் பாடத் தொடங்கி விடுகிறானே!

இளையவன் தனக்கும்
ஆற்றாது என்பெருஞ்
சேனை நம்ப!

[நம்ப – பெரியோனே.]

என்று பீடிகையாய்த் தம்பி தோளிலும் ஓர் அவசர மாலை போடுகிறான். போட்டு விட்டு, உடனே விண்ணளாவி நிற்கும் ஒரு சிலையை 'இதற்கு எப்படி மாலை போடுவது!' என்று அண்ணாந்து பார்ப்பவனைப் போல் பார்க்கிறான்.

ராமவீர ஆகிருதியை மனக் கண்ணுக்கு எதிரே நோக்குகிறான். அது என்ன, சிலை தானா! சிரமமும் இல்லை; சினமும் இல்லையே! எவ்வளவு அனாயாசமாக, தன்னைச் சூழ்ந்திருந்த அரக்க வெள்ளத்தை உறிஞ்சி விட்டு அப்படி நிற்கிறது!

'ராவணேச்வரனாகிய நம்மையும் முதுகு காட்டச் செய்ததே!'– இப்போது நெஞ்சு கொதிக்கவில்லை; அந்த வீரத்தை மதிக்கத்தான் முயல்கிறது.

ராமனைக் காட்டிற்குத் துரத்திய கூனியைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறான் ராவணன். கூனி சூழ்ச்சியை மட்டுமல்ல, கூனி கதையையும் விசாரித்துத் தெரிந்து கொண்டிருக்கிறான்.

பண்டைநாள் இராகவன்
பாணி வில்உமிழ்
உண்டைஉண் டதனைத்தன்
உள்ளத்(து) உள்ளுவாள்

[பாணி வில்—கை வில். உமிழ் – வேடிக்கையாகத் தெறித்த. உள்ளுவாள்—நினைத்துக் கொள்வாள்.]

என்ற அந்தக் கதையும் தெரியும் ராவணனுக்கு.

அப்போது அந்தக் குழந்தை—ராகவனுக்கு ஏதாவது சிரமம் உண்டா, சினம் உண்டா! அதே நிலைமைதான் தன் மார்பிலே பாணங்களைப் பொறித்த போதும், தன் படை வீரர்களின் ஆவியைப் பறித்த போதும்!—என்கிறான் :

எறித்தபோர், அரக்கர்
ஆவி எண்ணிலா
வெள்ளம் எஞ்சப்
பறித்தபோது, என்னை
அந்தப் பரிபவம்
முதுகில் பற்றப்

பொறித்தபோது, அன்னுன்
அந்தக் கூனிகூன்
போக உண்டை

தெறிந்தபோது ஒத்த
தன்றி, சினம்உண்மை
தெரிந்த தில்லை!

[எறித்த போர் – (கொலைக் கருவிகள்) வீசி எறியப்பட்ட போரில். அரக்கர் ஆவி எண்ணிலா வெள்ளம் எஞ்ச – எண்ணில்லாத வெள்ளக் கணக்காக அரக்கர் உயிர்கள் ஒழியும்படி. பரிபவம் – அவமானம். முதுகில் பற்ற — முதுகைப் பற்றிக் கொண்டு தொடரும்படி. பொறித்த போது – ராமன் தன் பாணங்களை மார்பில் பதியவைத்த போது, தெறித்த போது ஒத்ததன்றி — தெறித்தபோது இருந்த நிலைமையை ஒத்திருந்ததேயன்றி. சினம் உண்மை—கோபம் என்று ஒன்று இருந்தது என்பதே.]

'அப்படி, இப்படி' என்று எடுத்துக் காட்டவும் இயலாத அந்தப் பரிபவத்திலும், புகழ் மாலையின் நீளமோ, கனமோ கொஞ்சமும் குறைந்து போகவில்லை. 'அந்தப் பரிபவம் முதுகிற்பற்றப் பொறித்தபோது' என்று கூறுவதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

ராமன் பாணங்களைப் பொறித்து விட்டாலும் ராவணனுடைய நெஞ்சிலே – தமிழகத்தின் மூவேந்தர்கள் இமய நெற்றியில் தமது வீர சின்னங்களைப் பொறித்த மாதிரி. ராவணன் முதுகு காட்டியதும் அந்தப் பெரிய முதுகிலே பாணங்கள் பதியவில்லை; அவமானம் பொறிக்கப் பட்டதாம்.

புகழப் புகழ, ராமனுடைய வீரப் பெருமையும் உலகளந்த உருவம் போல் வளர்ந்து கொண்டே போகிறது.

தீயையும் தீய்க்கும்;
செல்லும் திசையையும்
தீய்க்கும்; சொல்லும்

வாயையும் தீய்க்கும்;
உன்னின் மனத்தையும்
தீய்க்கும் மன்னே!

[உன்னின் – நினைத்துப் பார்த்தால்.]

என்று, தன் மார்பிலே பொறிக்கப்பட்ட அந்த ராம பாணத்திற்குப் புகழ் மாலை சூட்டுவதைப் பாருங்கள்.

ராவண பாஷையில் ராமன் புகழ்

ராமபாணம் மார்பிலே பொறிக்கப் பெற்ற போதே, அதன் பெருமை உள்ளத்திலும் பதிந்து விட்டது போலக் காண்கிறது. மனேபாவம் பேசுகிறது இப்போது அதன் பெருமையை:

மேருவைப் பிளக்க
என்ருல், விண்கடந்(து)
ஏக என்ருல்,

பாரினை உருவ
என்ருல், கடல்களைப்
பருக என்ருல்,

ஆருமே, அவற்றின்
ஆற்றல்; ஆற்றுமேல்,
அனந்த கோடி

மேருவும் விண்ணும்
மண்ணும் கடல்களும்
வேண்டு மன்றே!

[ஏக என்ருல் – அப்பால் போ என்ருலும். பாரினை–பூமியை. ஆருமே–நிரம்பியிருக்கும். அவற்றின் ஆற்றல் – அந்தப் பாணங்களின் வல்லமைக்கு. ஆற்றுமேல் – அத்தகைய பாணங்களைப் பொறுத்துக் கொண்டு சமாளிப்ப தென்ருல்.]

ராம பாணங்களின் இத்தகைய உக்கிர வேகத்தை முதற் போரிலே கண்டறிந்து கொள்வதற்குமுன் உக்கிர சக்தியெல்லாம் தனக்கே உரியது என்பதுதான் ராவணன் கட்சி. சீதையை முதல் முதல் சந்தித்தபோது தன் புகழைத்தானே பின்வருமாறு பாடிக்கொண்டிருந்தான்:

'மேருவைப் பறிக்க
வேண்டின், விண்ணினை
இடிக்க வேண்டின்,

நீரினைக் கலக்க
வேண்டின், நெருப்பினை
அவிக்க வேண்டின்,

பாரினை எடுக்க
வேண்டின், பலவினை—
சிலசொல் ஏழாய்!

யாரெனக் கருதிச்
சொன்னுய்? இராவணற்(கு)
அரி(து)என்?' என்ருன்.

ஸ்தூல பலமே நிகரற்ற பலம் என்றும், 'இந்த ராட்சஸ – மிருக பலத்திற்கு வரம்பு நானே!' என்றும் பேசிய ராவண பாஷை சீதை யுள்ளத்தில் பதிந்து ராவணனை உள்ளபடியே அறிவித்து விட்டது. இது ஆரணிய காண்டத்தில் கிடைக்கும் செய்தி.

இதே பாஷையில் சீதை ராவணனிடம் ராமபாணத்தின் வலிமையை வலியுறுத்திப் பேசினுள், சுந்தர காண்டத்திலே:

மேருவை உருவல்
வேண்டின், விண்பிளந்(து)
ஏகல் வேண்டின்,

ஈரெழு புவனம்
யாவும் முற்றுவித்
திடுதல் வேண்டின்,


ஆரியன் பகழி
வல்ல(து)! அறிந்திருந்(து)
அறிவி லாதாய்!

சீரிய அல்ல
சொல்லித் தலைபத்தும்
சிந்து வாயோ?

அப்போது சீதை சொன்னதை ராவணன் துளியும் நம்பவில்லை. 'ராமபாணத்திற்கே உண்மையில் உரிய சக்தி உனக்கு இருப்பதாகக் கனவு காண்கிருயே!' என்பது சீதையின் குறிப்பு.

சீதை அப்படிச் சொல்லும்போது அந்த உண்மை பத்துத் தலைக்குள்ளும் புகுந்து பதியவில்லை. அதுவே

காற்றையே மேற்கொண்
டானே? கனலையே
கடாவி னானே?



உண்மை யென்பதை இப்போது இந்த முதற் போரின் அனுபவத்திற்குப் பின்பு தான் ராவணன் ஒப்புக்கொள்கிருன் தன் பாட்டனிடம்.

அனுமன் கழுத்திலும் ஒரு மாலை

இப்படியெல்லாம் ராமனுக்கும் ராமபாணங்களுக்கும் புகழ் மாலை சூட்டுகிறவன் அனுமன் கழுத்திலும் விழும்படி ஒரு புகழ் மாலையை வீசி எறிகிருன்:

கூற்றையே ஊர்கின்
ருனே?—குரங் கின்மேல்
கொண்டு நின்ருன்.

[கடாவினனே – ஏறிச் செலுத்துகிருனே. கூற்றையே – யமனையே. ஊர்கின்

ருனே — ஊர்தி அல்லது வாகனமாய்க் கொண்டிருக்கிருனே.]

மேலும் ராமனுக்கே மாலை

உமிழ்நீர் வறண்ட நாக்கு வெறி கொண்டதுபோல் மேலும் உரையாடு கிறது. ராமன் கருதுவதுதான் தாமதம், எங்கும் சரங்களாய் (அம்புகளாய்)க் காட்டுகிறதே!—என்கிருன்.

சிவபெருமானின் எட்டுத் தோள்களும் திருமாலின் ஆயிரம் தோள்களும் ராமனுடைய ஒரு விரலின் வலிமைக்குத் தான் ஈடாகக்கூடுமா?—என்கிருன்; தவசிபோல் இருக்கிருனே, அவனுடைய அம்புக்கு ஆற்ருமல் ராவணேச்வரனுகிய நானும் நொந்து போனேனே! நானல்லாத வேறு யாரே அந்த அம்புகளைக் கண்ணெடுத்துப் பார்க்க முடியும்?' என்கிருன்.

'வேதம் தப்பினுலும் தப்பாத சரங்கள், தாத்தா!' என்கிருன். 'எங்கிருந்து வருகிறதோ! எப்படி வருகிறதோ! எங்கு இருந்து புறப்படுகிறதோ! அந்த வில் தான் ராமனுக்கு வலது புறத்தில் இருந்ததா, இடது புறத்தில் இருந்ததா! அறியேன், அறியேன், தாத்தா!' என்கிருன்.

மாலியவான் கொஞ்சமும் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டே யிருக்கிருன். 'பயலுக்குப் புத்தி வந்து விட்டது போலிருக்கிறது; ஐயோ, பிழைத்துப் போகட்டும்; தலையோடு திரியட்டும்' என்று நினைக்காமலா இருக்கும் கிழவன் நெஞ்சு!

ராவணனுடைய நெஞ்சோ, ராமனுடைய அந்தக் கொடிய வீரச் செய்கையிலிருந்து அந்தச் செய்கை பிறந்த அழகுத் திருமேனியையும் நினைத்துப் பார்க்கிறது; போற்றிப் புகழ்கிறது. அந்த அழகிலிருந்து தோன்றிய

தீயெனக் கொடிய
வீரச் சேவகச்
செய்கை

ராவணனை இப்போதும் என்ன பாடு படுத்துகிறது!

சீதை போர்க்களத்திலே ராகவன் மேனியையும் அந்தக் 'கொடிய வீரச் சேவகச் செய்கை'யையும் கண்டால் நம்மை எப்படி மதிப்பாள், எப்படி மதிக்க முடியும்! — என்கிறது ராவணனுள்ளம்.

பாட்டனும் கேட்க உரக்கச் சிந்தித்து,

நாயெனத் தகுதும்
அன்றே, காமனும்
நாமும் எல்லாம்!

[தகுதும் – தகுவோம்.]

என்று வாய்விட்டுச் சொல்லுகிருன்.

'மேனி விஷயத்தில் மன்மதனையும், வீரத்தில் என்னையும் நாய்களாகக் கருதி விடுவாளே சீதை!' என்ற வார்த்தையும் ராவணன் வாயிலிருந்து புறப்படுகிறது என்ருல், இப்படி ஒரு புகழ் மாலையை ராவணனைப் போன்ற எதிரியிடமிருந்து பெறக் கூடிய ராமன் பெருமையை — ராம குணுதிசயத்தை என்னென்பது!

இந்தக் கம்ப சித்திரம் ராவண குணுதிசயத்தை நாம் முற்றும் புரிந்து கொள்வதற்கும் துணை புரிவதாகும்.

*　　*　　*

இந்தக் கட்டத்திலுள்ள கவிதையின் தரமும் ஊன்றி நோக்கத் தக்கது. கவிஞனுடைய சொற் கலை ராம லட்சுமணரின் அம்பருத் தூணிபோல் எடுக்க எடுக்கக் குறைவு படாதது என்று கம்பன் ஏற்கெனவே கூறி யுள்ளான். 'சொல் ஒக்கும் கடிய வேகச் சுடுசரம்' குறித்தும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இந்தச் சொற்கலை எல்லை யில்லாத இசைக் கடலில் மிதக்க வேண்டுமாம். இந்த இசையும் இந்தக் கட்டத்தில் ராம பாணத்திற்கு உவமையாகிறது.

எல்லையில் செல்வம்
தீரா இசையெனப்
பழுதி லாத

பல்அலங் காரப்
பண்பே காகுத்தன்
பகழி மாதோ!

[செல்வம் தீரா இசை—இசைச் செல்வம். பல் அலங்காரப் பண்பே — பல வகைப்பட்ட அழகுப் பண்பே. காகுத்தன் பகழி—ராமபாணம்.]

என்பது இசை யறிஞுன ராவணன் வாக்கு.

ராம பாணத்தையும் ராமனையும் புகழ்ந்துரைக்கும் இந்தப் பாடல்களிலும் ராம பாணத்தின் கூர்மை நேர்மைகளுடன் 'எல்லையில் செல்வம் தீரா இசை'யையும் அனுபவிக்கிறோம்.



102. கும்பகருணனை இகழ்வதா ?

மாலியவானும் ஏற்கெனவே ராமனுக்குப் புகழ் மாலைகள் சூட்டியதுண்டு. ராவணனுக்குத் தான் அப்போது எவ்வளவு கோபம்! இப்போது, மாலியவான் பிரமித்துப் போகும்படி அவ்வளவு நீண்ட, பருமனுள்ள, புகழ் மாலையை ராவணனே ராமனுக்குக் கழுத்து நிறைய, வீரத்தோள் நிறையச் சூட்டப் பார்க்கிறான். இப்படி ஒரு கம்ப சித்திரம்.

பாட்டன் பேச்சு

'என் வார்த்தைக்குத் தான் நீ காது கொடுக்கவில்லை' என்று தொடங்கினான் மாலியவான். 'கோபமே தெரியாத உன் தம்பி எவ்வளவோ சொல்லிப் பார்த்தானே, அதையும் கேளாமல் இந்தக் காதால் வாங்கி அந்தக் காதால் விட்டு விட்டாயே!' என்றும் சொல்லுகிறான்.

[இதே மூச்சில் ராவணனுடைய வீரத்தையும் பழைய வெற்றிகளையும் குறிப்பாக நினைவூட்டவும் செய்கிறான் :

முன் உரைத் தேனை
வாளா முனிந்தனை ;
முனியா உம்பி
இன் னுரைப் பொருளும்
கேளாய்; ஏது உண்(டு)
எனினும் ஓராய்;
நின் உரைக்(கு) உரைவே(று)
உண்டோ? நெருப்(பு)உரைத்
தாலும் நீண்ட
மின் உரைத் தாலும்
ஒவ்வா விளங்(கு)ஒளி
அலங்கல் வேலோய் !

[முன் உரைத்தேனை – முன்னே ராம பராக்கிரமத்தைச் சொல்லிக் காட்டிய என்னை. வாளா முனிந்தனை – வீணாகக் கோபித்துக் கொண்டாய். முனியா உம்பி– கோபிக்கல் என்பதையே அறியாத உன் தம்பி விபீஷணன். இன்னுரைப் பொருளும் – இனிய வாசகத்தின் பொருளையும். ஏது – காரணம். ஓராய் – ஆராய்ந்து பார்க்காமல் இருந்து விட்டாய். உரைத்தாலும் – மாற்று அறியும்படி உரைத்துப் பார்த்தாலும். மின் – மின்னல். அலங்கல் – மாலை; (இங்கே) வெற்றி மாலை. அலங்கல் வேல் – மாலை சூடிய வேலாயுதம்.]

'உன் உரைக்கு மாற்று இல்லை, உரை இல்லை; இது மாற்று அறியாத, உரையிட முடியாத தங்கத்திற்கும் மேலான பொருள் இல்லையா!' என்று கொஞ்சிப் பேசுகிறான். ராவணனுடைய வீரத்திற்கும் வெற்றிக்கும் அறிகுறியான வேலாயுதத்தையும் புகழ்ந்து கொஞ்சப் பார்க்கிறான்.

'நான் சொன்னதைக் கேட்கவில்லை' என்று மாலியவான் சொன்னதில் கூட ராவணனுக்குக் கோபம் வந்திராது. 'கோபமே இல்லாத உன் தம்பி விபீஷணனுடைய இன்னுரைப் பொருளையும் நீ செவியில் போட்டுக் கொள்ளவில்லையே', என்ற வார்த்தை ராவண கோபத்தைத் தூண்டக் கூடியது தானே! எனவே, பேரப் பிள்ளையை அணைத்துப் பேசுவது போல் பேசுகிறான் பின் இரண்டு அடிகளில்.

இப்படிப் பேசுகிறவன், நீண்ட பேச்சால காரியம் கெட்டுப் போகுமோ என்று அஞ்சுகிறான். எனவே, சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையில், 'உண்மையான உறவினர் சொன்ன உண்மையை ஏற்றுக் கொள்ளாத நீ, உறவினருடனும் நண்பருடனும், கல்வி செல்வங்களுடனும்

படையுடனும் அழிந்து போவாய்!' என்று ஏதோ சாபம் கொடுப்பது போலத் திடீரென்று பேசி முடித்து விடுகிறான்.

எப்படியாவது ராவணனை வழிக்குக் கொண்டு வந்து காப்பாற்றி விட வேண்டும் என்பதுதான் இந்தப் பாட்டனின் நோக்கம். 'இத் தருணம் தப்பினால் வேறு தருணம் வாய்க்காது; மரணம் தான் கதியும் விதியுமாகும்' என்ற தேர்ந்த அபிப்பிராயத்துடனே தான் இப்படிப் பேசுகிறான் மாலியவான்.

திரைக்குள்ளிருந்து வந்த தீப்பந்தம்!

இந்த விதமாக மாலியவான் பேசிய போதெல்லாம் ராவணனுக்குக் கடுங் கோபம் வந்துவிடும். பாட்டனை எரித்து விடுவது போலப் பார்ப்பான் பேரன். 'தகாத வார்த்தை சொல்லாதே' என்று தடுத்து விடுவான். இப்பொழுது இருக்கும் நிலையிலோ அப்படி ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

'தாத்தா சொல்வது உண்மை' என்பதாக ஒப்புக் கொள்ளத்தான் போகிறானோ என்று கூடத் தோன்றுகிறது நமக்கு. ஆனால் ராமாயணம் அவ்வளவு சீக்கிரம் முடியப் போகிறதா, என்ன!

ராவணனோடு மாலியவான் உரையாடும் போது வேறொருவரும் அங்கே இல்லை. ஆனால் மாலியவான் பேசி முடித்தானோ, இல்லையோ —'நீ பேசுவது சிறு பேச்சு— அற்பப் பேச்சு' என்று உறுமுகிறது ஒரு குரல் திரை மறைவிலிருந்து.

கிழவனைப் பொசுக்க வந்த இரண்டு தீப்பந்தங்கள் போல் எரிந்து நோக்குகின்றன இரண்டு கண்கள். மகோதரன் தான் திடுதிடுவென்று உள்ளே வந்து விட்டான்.



ராவணன் தனியே அரண்மனைக்கு வந்து சேர்ந்தபோது எந்திரப் பதுமைகள் போல் இவனை நோக்கி நின்றார்களே, அந்த மந்திரிமார் கூட்டத்தில் மகோதரனும் நின்று கொண்டிருந்தான். எங்குமுள்ள அரக்கச் சேனையையும் திரட்டி வருமாறு தூதர்களை அனுப்பிவிட்டு ராவணன் படுக்கையில் விழுந்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த போதும் மகோதரன் செயலற்று வெளியே நின்று கொண்டிருந்தவன் தான்.

மாலியவான் உள்ளே நுழைந்ததும், மகோதரனுடைய மூளை சுறுசுறுப்பாகி விட்டது என்று கருதலாம். சத்தம் போடாமல் மெல்லத் தானும் தொடர்ந்து உள்ளே வந்து, பாட்டனுக்கும் பேரனுக்கும் தெரியாமல் ஒதுக்குப் புறத்தில் மறைந்து நின்று கொண்டிருந்தான்.

மாலியவான் பேச்சைக் கேட்டதும், 'ஐயோ, கெடுத்து விட்டானே கிழவன்!' என்று ஆத்திரம் பொங்கியது மகோதரனுக்கு. பளிச் சென்று வெளிப்பட்டுப் பாட்டனை அதட்டிப் பேரனுக்குப் போர் வெறி ஊட்டப் போகிறான்.

மகோதரனுடைய 'திடீர்' வருகையும் மாலியவானை ஒரே வார்த்தையில் வாய் அடைக்கச் செய்வதும், சோர்ந்து படுத்திருந்த ராவணனைக் குதித்தெழுமாறு பேசத் தொடங்குவதும் எவ்வளவு விரைவில் நடைபெறுகின்றன, பாருங்கள்!

ஆயவன் உரைத்த
லோடும், அப்புறத்(து)
இருந்த ஆன்ற
மாயைகள் பலவும்
வல்ல மகோதரன்
கடிதின் வந்து
தீயெழ நோக்கி,
'என் இச் சிறுமை நீ
செப்பிற்(று)?' என்ன,



ஓய்வுறு சிந்தை—
யானுக்(கு) உறுதபே—
ருறுதி சொன்னான்.

[ஆயவன்—அந்த மாலியவான், ஆன்ற—மிகுதியன. கடிதின் — விரைவாக. என் — என்னே. செப்பிற்று — சொன்னது. ஓய்வுறு — ஓய்ந்துள்ள. உறுத — நன்மை தரமுடியாத.]

இந்த மகோதரனைக் குறித்து விபீஷணன் ராமனிடம்,

தாயை அயினும்
சலித்திடு வஞ்சனை
தவிரா

மாயை யான்உளன்
மகோதரன் என்றொரு
மறவோன்

என்று முதல் முதல் செய்தி சொல்லுகிறான்.

தீ - நாக்கு

இந்த மகோதரன் 'பெரிய பெரிய உறுதிமொழிகளைத்தான் சொல்லுகிறானாம். ஆனால் ராவணனைப் படுகுழியில் தள்ளப்போகும் இந்த உறுதி மொழிகளை 'உறாத பேருறுதி' என்று கவிஞன் குறிப்பிடுகிறான். என்ன பொருள் புதைந்த சொற்றொடர்!

'நீ இனியது விரும்பினாய்; அதற்கு இதுதான் நல்ல வழியென்று அந்த வழியையும் மேற்கொண்டாய்!' என்று வசீகரமாகத் தொடங்குகிறது மகோதரன் பேச்சு.

'இப்படி எண்ணித் துணிந்த பின் பலனைக் கருதாமல் செய்ய செய்ப வேண்டியதுதானே' என்று ஏதோ ஒரு புதிய உபதேசம் செய்வதுபோல் பேசுகிறான்.

ஒன்றிலே நிற்றல்
போலாம் உத்தமர்க்(கு)
உரியது

என்று உத்தம வழியும் காட்டுகிறான்.

'ஒன்றே செய்யவும் வேண்டும்; நன்றே செய்யவும் வேண்டும்; இன்றே செய்யவும் வேண்டும்; இப்போதே செய்யவும் வேண்டும்' என்றெல்லாம் சொல்லுகிறார்களல்லவா! அந்த மாதிரி ராவணன் 'நன்றே' என்று கருதிய வழியில் துணிந்து சென்று கொண்டேயிருக்க வேண்டியதுதான் என்கிறான் மகோதரன்.

நயமும் பயமுமாகப் பேசிய பாட்டனைப்போல மகோதரனும் நயமாகவும் பயமுறுத்தியும் பேசிப் பார்க்கிறான்:

பின்றுமேல் அவனுக்(கு)
அன்றோ பழியொடு
நரகம் பின்னை?

இந்த வேதாந்தத்திற்குப் பின் வீர சித்தாந்தமும் வெளிப்படுகிறது. உறுதி மொழியை உறுதிப் பேசுகிறான்; உறுக்கியும் பேசுகிறான். பிரம்பும் கையுமாக மாணுக்கரை அதட்டும் ஆசிரியன் போல.

பகுத்தறிவு—வாதமும் செய்கிறான்:

வென்றவர் தோற்பர்,
தோற்றோர் வெல்குவர்;
எவர்க்கும் மேலாய்

நின்றவர் தாழ்வர்,
தாழ்ந்தோர் உயர்குவர்:
நெறியும் அஃதே

[நெறி-உலக நடை. அஃதே—அதுவே.] என்கிறான். இது அறிஞர் சித்தாந்தம் என்றும் சொல்லுகிறான்.

இப்படிச் சொல்லிவிட்டு ராவணனை முகம் நோக்கி:

ஆற்றலுக்(கு) எல்லை
உண்டோ!

என்று மந்திரிப்பது போல் உச்சரித்து அபார சக்தியை ராவணனுக்குள்ளே ஆவாகனம் செய்யப் பார்க்கிறான்.

'இனிமேல் தாமதம் கூடாது; கூடவே கூடாது' என்கிறான்:

இனிஇறை தாழ்த்தி
யாயின், இலங்கையும்
யாமும் எல்லாம்

கனியுடை மரங்கள்
ஆகக் கவிக்குலம்
கடக்கும் காண்டி!

[இறை — கொஞ்சமும்.]

'புல் நுனியில் பனித்துளி போன்ற மனிதர்களா உனக்கு ஒரு பொருள்!' என்று சொல்லி விட்டு,

என், உனக்(கு) இளைய
கும்ப கருணனை
இகழ்ந்த(து)' என்றாய்!

என்ற முடிவுப் பெருவார்த்தையுடன் மகோதரன் பேருரையை முடிக்கிறான்.

மறுபடியும் போர்ப் பெருந் தீயை மூட்டி விடுகிறது தீ நாக்கு.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

103. தூங்கினான், தூங்கினானே

(ஆதிகவியின் அதிசயக் கற்பனை)

உயிர் போவதற்கு முன் 'உயில்' எழுதிச் செல்வங்களை வழங்குவது உண்டல்லவா! கும்பகர்ணனும் ஒரு மரண சாசனம் செய்து வைத்தான்.

அந்தச் சாசனத்திலே, அந்த ராட்சஸன் தன்னுடைய ராட்சஸ பலம், ராட்சஸ அறிவு, ராட்சஸப் பிடிவாதம், கொலை வெறி முதலான உடைமைகளைச் சில 'வாரிசு'களுக்கு உரிமையாக வழங்கி விட்டானும். 'மெத்த வளருது மேற்கே!' என்று சொல்லும்படி அங்கே கொடுத்து விட்டதாகக் கேள்வி.

கும்பகர்ணனுக்குச் சகோதர பாசமும் ஒரு சிறப்பியல்பாகும். அந்தச் செல்வத்தையும் மேற்கே ஏற்படும் 'வாரிசு'களுக்கே கொடுத்ததாக வதந்தி.

வீரத்தோடு வீரதர்ம உணர்ச்சியும் கும்பகர்ணனிடம் காணப்பட்டது. இந்தச் செல்வத்தையாவது கிழக்குத் திசைக்கும் பங்கிட்டுக் கொடுக்கலாமென்று தீர்மானித்தானும்.

என்ன உறக்கம்! என்ன விழிப்பு!

எல்லாவற்றுக்கும் மேலாகப் பெருந்துயில் கும்பகர்ணனுடைய விசேஷ உடைமையல்லவா! தன்னுடைய இந்த அரும்பெருஞ் செல்வத்தை யாருக்குஉயில் பண்ணி விடலாம் என்று கொட்டாவி விட்டுக் கொண்டே சிந்தித்துப் பிற்கால இந்தியாவுக்கே வழங்கி விட்டதாகத் தேச பக்தர்கள், அன்னிய ஆட்சியில் அவதிப்படும் போது, ஹாஸ்யமாகக் கூறியது உண்டு.

'திருப்பாவை'யில் உறங்கும் தோழி ஒருத்தியை எழுப்புகிறவர்கள்,

> ......பண்டொரு நாள்
> கூற்றத்தின் வாய்வீழ்ந்த
> கும்ப கருணனும்
>
> தோற்றும் உனக்கே
> பெருந்துயில்தான் தந்தானோ?

என்று பாடிப் பரிகசிக்கிறார்கள்.

குறட்டை போட்டுத் தூங்குகிறவனை 'கும்பகர்ண உபாஸனை' செய்கிறான் என்கிறோம். எளிதில் எழுப்ப இயலாதபடி உறக்கத்தில் ஆழ்ந்திருப்பவனையும் 'கும்பகர்ண நித்திரை' செய்வதாகப் பரிகசிக்கிறோம்.

மாதக் கணக்காய்த் தூங்கினான் கும்பகர்ணன் என்பது ஆதிகவியின் கற்பனை. இப்படித் தமோகுணத்தில் அழுந்திக் கிடந்தவன் எழுந்து நிமிர்ந்து விட்டால் எதிராகப் போரிட வல்லவர் எவருமில்லை என்றும் வால்மீகி கற்பனை செய்திருக்கிறார். உறக்கத்தில் எவ்வளவு பிரியமோ; அவ்வளவு பிரியம் விழித்த பின் யுத்தத்திலும்.

கும்பகர்ணனுடைய நித்திரை சாப நித்திரை, பாப நித்திரை; பலமோ வர பலம். உடல் வலிமையைப் போல் மன வலிமையும் அதிகம்.

பசியும் பெரும் பசி; தீனியும் பெருந்தீனி—அரக்கர்களும் அஞ்சி நோக்கும் பசி, தாகம். எதிரிகளின் இரத்தத்தைக் குடிக்கவேண்டும் என்ற அந்தத் தாகத்திற்குத்தான் என்ன குறைவு!

கும்பகர்ணனுக்குக் கோபமும் அதிகம்; ரோஷமும் அதிகம். மலை போன்ற கும்பகர்ணன் எரிமலையாகி விடுவான் கோபத்திலே.

வீர தர்மம் தவறக் கூடாது என்ற ஆத்திரத்திற்கும் குறைவில்லை, வீரத்திலுள்ள பிரியம் வீரதர்மத்திலும் இவனுக்கு இருக்கிறதே யென்று அதிசயிக்கும் படி இந்தக் காவிய பாத்திரம் வனையப் பெற்றிருக்கிறது.

வீர தர்மத்துடன் அரச நீதியும் பேசுகிறான் வால்மீகியின் கும்பகர்ணன். அகம்பாவம் பொங்கிய பின்பே நீதி உணர்வும் தர்ம உணர்வும் மறைந்து போகின்றன.

அகம்பாவத்துடன் உறவுப் பாசமும் ஓங்கவே, கும்பகர்ணன் வானரர் பயங்கரன், வானவர் பயங்கரன், லோக பயங்கரன்! எதிரிகளின் தாக்குதலைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் சிரித்துக் கொண்டே குரூர வீராவேசச் செயல்களைச் செய்து விடுவான்.

வால்மீகியின் கும்பகர்ண — கற்பனை இது. கம்பனுடைய கற்பனையைப் பார்ப்பதற்கு முன், வால்மீகியின் கதைப் போக்கை ஒட்டிக் கும்பகர்ணனை நாம் இன்னும் சற்று விளக்கமாகத் தெரிந்து கொள்வது நலம்.

ஆதிகதையில் கும்பகர்ணன்


ராவணனுடைய மந்திராலோசனை மன்றத்தில் கும்பகர்ணன் பேசும்போது ராவணன் செய்வது தவறு என்றே கண்டிக்கிறான். நீதி சாஸ்திரம் அறிந்திருந்தும் அறியாதவனைப் போல் ராவணன் நடந்து கொண்டதாகக் குற்றம் சாட்டுகிறான்.

'ராம லட்சுமணர்கள் மீது விரோதம் இருந்தால் முந்தி அவர்களை எதிர்த்துத் தோற்கடித்து வதைத்துவிட்ட பிறகல்லவோ சீதையைக் கொண்டு வந்திருக்க வேண்டும்?' என்பது கும்பகர்ணன் நீதி.

'அப்படிச் செய்திருந்தாயானால் அண்ணா! சீதையும் உன்னை விரும்பி ஒப்புக் கொண்டிருப்பாள். மலையைத் தழுவி நதி ஓடுவது போல் வெற்றி வீரனை அவள் தொடர்ந்திருப்பாள்' என்பது கும்பகர்ணன் அபிப்பிராயம்.

அப்படிச் செய்யாமல் சீதையை அபகரித்து வந்தது பாப காரியம் என்கிறான். இத்தகைய 'அரச நீதி'க்கு — வீர தர்மத்திற்கு — நமது நாட்டில் சரித்திரச் சான்றுகளும் உண்டு.

இவ்வளவு தைரியமாகப் பேசிய கும்பகர்ணன், கடைசியாக ராவ



னனை நோக்கி, 'ராமனை நான் வதஞ் செய்து அவன் இரத்தத்தைக் குடித்து உனக்கு வெற்றி கொண்டு வருவேன். அண்ணு! கவலைப்படாதே; செய்ய வேண்டியதைச் செய்' என்றும் சொன்னுன் மந்திராலோசனை மன்றத்திலே. இப்பேச்சிலே முரண்பாடு காணப்படுகிறதல்லவா!

அதிக நித்திரை செய்யும் கும்பகர்ணன் தமோகுணமும் மந்தபுத்தியும் உள்ளவனுதலின் முரண்படப் பேசினுன் என்று கருதுவோருண்டு. கும்பகர்ணன் அறிவுத் தெளிவுடனேயே பேசினுன் என்றும், பேச்சின் பிற்பகுதியில் ராவணனிடம் அன்புமேலிட்டு உணர்ச்சி வசமாகப் பேசிவிட்டான் என்றும் தமது 'சக்கரவர்த்தித் திருமகனி'ல் ராஜாஜி சமாதானம் சொல்லியிருக்கிருர். இக்கருத்தை வால்மீகத்தை ஆழ்ந்து கற்றிருப்போர் சரியென்றே ஒப்புக்கொள்வர்.

கும்பகர்ணனுடைய வீர தர்மத்திற்கும் விபீஷணனுடைய தர்ம வீரத்திற்கும் அடிப்படையிலேயே வேற்றுமை உண்டென்று கருத வேண்டும். கும்பகர்ணனுடைய நீதியுணர்வு விபீஷணனுடைய நீதியுணர்வைப்போல் மெய்யறிவுத் தெளிவிலும் நல்லறத்தெளிவிலும் ஊறிக்கிடந்து உருவாகியதன்று.

உணர்ச்சி அறிவையும் வென்றுவிடுகிறது கும்பகர்ணன் குணுதிசயத்திலே. சகோதர பாசம் வீரதர்மத்தில் இவனுக்குள்ள பற்றையும் வென்று விடுகிறது.

இந்த நிலையை மந்திராலோசனை — மன்றத்தில் கண்டதுபோல், தோல்வியுற்ற ராவணன் கும்பகர்ணனை எழுப்பி வரச் செய்யும் காட்சியிலும் காண்கிறோம்.

கும்பகர்ணன் எழுந்து போரைப் பற்றித் தெரிந்துகொண்டதும்,—முக்கியமாக ராவணன் போரில் அடிபட்டு உயிருடன் தப்பிவந்தான் என்பதை அறிந்து கொண்டதும்—சினந்து சீறி ராம லட்சுமணர்களுடைய இரத்தத்தைக் குடித்து வெற்றியுடன் ராவணனைச் சந்திப்பதாகச் சொல்லுகிறுன்.

இந்த உணர்ச்சிவசமான ரோஷப் பேச்சைக் கேட்ட அமைச்சர்கள் மகிழ்ந்து போகிறுர்கள். ராவணனைச் சந்தித்துக் கலந்து ஆலோசித்தபின் கும்பகர்ணன் அப்படியே செய்ய வேண்டுமென்று மகோதரன் அபிப்பிராயப்படுகிறுன்.

ஆனுல் ராவணனைச் சந்தித்து உரையாடியதும், இந்த மனநிலை மாறுகிறது. அறிவு, உணர்ச்சியை வெல்லுகிறது. சகோதர பாசத்தின் மீதும் வீரதர்ம உணர்ச்சி கொஞ்ச நேரம் வெற்றி கொண்டாடுகிறது.

'சீதையை அபகரித்த பாபகாரியத்தின் பயனை இப்போது அனுபவிக்கிருய்' என்கிருன் கும்பகர்ணன். ஏற்கெனவே மந்திராலோசனை மன்றத்தில் வாதாடிய அந்த வீரதர்மக் கட்சியை மறுபடியும் சொல்லி, 'சீதையை அபகரிக்க விரும்பினுலும், விரோதிகளான ராமலட்சுமணர்களை வதஞ் செய்துவிட்டுப் பிறகல்லவா அபகரித்திருக்க வேண்டும்?' என்று அதே நீதி–விளக்கம் செய்கிருன்.

இது கேட்ட ராவணன், 'என் பேரில் உனக்குப் பிரியம் இருப்பது உண்மையானுல் இப்போது எனக்கு உதவுவாய்' என்றெல்லாம் பதில் சொன்னதும், மீண்டும் அந்தப் பிரியம் கும்பகர்ணனுடைய அறிவை மயக்கி வீரதர்ம உணர்ச்சியையும் மழுங்கச் செய்து விடுகிறது.



'அண்ணா, நீ கவலைப்பட்டது போதும். தம்பியாகிய நான் ஒரு போதும் உன்னைக் கைவிடமாட்டேன். ராமனுடைய தலையை உனக்கு எதிரில் கொண்டு போடப்போகிறேன்' என்கிறான்.

சகோதர பாசம் ஆணவத்தையும் கிளப்பிவிடுகிறது; வீரத்தையும் வெறி கொள்ளச் செய்கிறது. கும்பகர்ணன் சண்டைக்குக் கிளம்பி விடுகிறான்.

'முதலில் பெருந்தூக்கத்தினின்று எழுந்ததும் இயற்கை — வேகத்தில் பேசினான். பிறகு பசி ஓரளவு தீர்ந்ததும் சுபாவத்தில் நீதி உணர்ச்சி கொண்டவனானபடியால் ராவணனிடம் விஷயங்களை ஆராய்ந்து ஹிதத்தை எடுத்து உரைத்தான். அதன்பின் ராவணனுடைய தற்காலக் கஷ்டநிலையைக் கண்டு உருகி, அன்பு மேலிட்டு மற்றதையெல்லாம் மறந்தொழிந்தான்' என்ற ராஜாஜியின் விளக்கத்தைக் கொண்டு வால்மீகியின் கும்பகர்ண குணநிசயத்தைத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

நீண்ட உறக்கத்தில் விருப்பம் கொண்டவன், ஒரே விழிப்பாய் அண்ணனுக்காகப் போராடுகிறான். தம்பியை அண்ணன் உத்ஸாகப்படுத்திப் போர்க்களத்திற்கு அனுப்ப, இவனும் ஒரே உத்ஸாகமாகி, சேனை வேண்டுமே என்ற உணர்வும் இன்றி, ஒருவனாகவே போருக்குப் புறப்பட்டு விடுகிறான். அண்ணன் நினைவூட்டிய பின்புதான் சேனையுடன் போகிறான்.

கும்பகர்ணனுடைய குரூர யுத்தத்தையும் வீராவேசத்தையும் வால்மீகி வருணிக்கிறார். நீண்ட சூலமும் தானுமாக இந்த வீரமலை வானர சேனையைக் கலக்குவதையும், பிறகு காயமுற்ற நிலையில் இரும்பால் செய்த உலக்கையும் கையுமாக வானரர்களைக் கொன்றும் தின்றும் அழிப்பதையும் பார்க்கிறோம்.

உறங்கி விழுந்தவன் விழிப்பே இல்லாத அந்த நீண்ட உறக்கத்திற்குப் போய்ச் சேர்வதற்கு முன் ராமனுடைய சேனையைத் தான் என்ன பாடுபடுத்துகிறான்! கை இழந்தும், கால் இழந்தும் வானரர்களுக்கு யமனாகவேயிருந்த கும்பகர்ணன் கடைசியாக ராம பாணத்தின் மூலமாக யமனுக்கு விருந்தாகிறான்.

* * *

கும்பகர்ணனுடைய நீண்ட பேருறக்கத்தையும், அந்த உறக்கத்திலிருந்து அவனை விழிக்கச் செய்ய அரக்கர்கள் செய்த பெருமுயற்சிகளையும் வால்மீகி நகைச்சுவை ததும்ப வருணிக்கிறார்.

எழுந்ததும் பசியை அடக்க முடியாதே யென்று ஆகாரத்தை முன் ஜாக்கிரதையாக மலை போல் குவித்து வைத்திருந்தார்கள் என்றும் ரஸமாகச் சொல்லுகிறார்.

பேரிகை சங்குகளைக் கொண்டு பெரிய சத்தம் போட்டும் உறக்கம் கலையாதவன், அரக்கர்கள் தட்டியும் குத்தியும் அடித்தும் எவ்வளவோ உபத்திரவப் படுத்திப் பார்த்த போதிலும் எழுந்துவிடவில்லை.

யானைகளை அவன் மேல் நடக்கச் செய்தார்கள் என்று கூடக் கற்பனை செய்கிறார். தூங்கினான் தூங்கினானே என்ற ரீதியில் தூங்கிக் கொண்டேயிருந்தான் கும்பகர்ணன்.

இப்பள்ளியெழுச்சியும் ஏதோ ஒரு யுத்தம் போலத் தான் இருக்கிறது அரக்கர்களுக்கு. கடைசியாகக் கண்ணைத் திறந்து பார்க்கிறான் கும்பகர்ணன். கொசுவின் உபத்திரவம் பொறுக்காமல் கையால் தட்டுகிறோமே, அப்படியே கும்பகர்ணன் எல்லாரையும் தட்டித் துரத்தி விட்டுக் கொட்டாவி விடுகிறான் என்ற குறிப்பில், எவ்வளவு நகைச் சுவை கும்மாளம் போடுகிறது!

உறக்கம் கெட்டு விட்டதே என்ற பெருங் கோபத்துடன் விஷயம் தெரியாமலே விழித்துக் கொள்கிறவன், பசி பொறுக்க முடியாமல் தான் எழுந்திருக்கிறான். இப்படிப் பசியும் கோபமும் சேர்ந்து கொண்டால், எழுப்பியவர்களின் கதிதான் என்ன!

ஆனால் எவ்வளவு முன் ஜாக்கிரதையாக மாமிசக் குவியல்களை அப்படி மலையாகக் குவித்து விட்டார்கள்! பசி தீர்ந்த பின்பு தான் அரக்கர்கள் ஜாக்கிரதையாகக் கும்பகர்ணனை அணுகத் துணிகிறார்கள்.

மகரிஷியான மகாகவியின் ஓர் அதிசயக் கற்பனை இந்தக் கதாபாத்திரம்.

தூங்கினான் தூங்கினானே—
கும்பகர்ணன்
தூங்கினான் தூங்கினானே

என்று மோகன ராகத்தில் பாடும்போது, நம் கண் முன் மலை போலப் பிரசன்னமாகி விடுகிற கும்பகர்ணனை நாம் எப்படி மறக்க முடியும்!

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

104. கம்பன் கண்ட கும்பகர்ணன்

*ச*டையப்ப வள்ளலின் அரண்மனையில் கதாப் பிரசங்கம் நடைபெறுகிறது. வால்மீகியின் கவிதை கானம் செய்யப்படுகிறது. கம்பனும் பிறருடன் இருந்து கேட்டுக் கொண்டிருக்கிறான்.

கேட்டதும் கண்டதும்

மனக் கண் முன் தோன்றுகிறது ராவண சபை. 'தம்பி கவலையற்றுத் தூங்குகிறானே' என்று ஏக்கம் பிடித்த ராவணன் கூறுவதும், 'இந்த ராட்சஸ குலதிலகம் இருக்க நமக்கும் உண்டோ குறை!' என்று அதே ராவணன் ஏக்கத்தை உதறி ஊக்கமாய்க் கர்ஜிப்பதும் காதில் விழுகின்றன.

'ஐயோ! அற்ப சுகங்களில் புத்தியைச் செலுத்தி இடைவிடாது தூங்குகிறானே' என்று தம்பியின் குறைபாடு இந்த அண்ணன் வாயிலாக வெளிப்படுவதை எப்படி ரஸித்துக் கேட்கிறான் கவிஞன்! வால்மீகியின் கதை எப்படி வசீகரித்து விடுகிறது!

முனிவரின் நகைச் சுவையும் நமது கவிஞனை வசீகரித்திருக்க வேண்டும். கும்பகர்ணனுடைய மூச்சுக் காற்றால் கிங்கரர்கள் எறியப்படுவது போன்ற காட்சிகள் மட்டுமல்ல; அந்தத் தம்பியை எழுப்புவதற்குச் சக்தியை விருத்தி செய்து கொள்ள வேண்டுமே என்று கிங்கரர்கள் மாமிசத்தையும் இரத்தத்தையும் அமிதமாக உட்கொள்வது போன்ற கருத்துக்களும் கம்பனை உற்சாகப்படுத்தியிருக்க வேண்டும்.

இப்படித் தொடங்கிய கும்பகர்ணன் கதை, நம் கவிஞன் ஏற்கெனவே பார்த்திருந்ததும் நினைத்திருந்ததுமான விஷயங்களை நினைவூட்டியிருக்க வேண்டும். பெருந் தூக்கம், பேருண்டி, பெருங் குறட்டை, முரண்டு, முரட்டுத்தனம், அதிக வலிமை முதலான விஷயங்களை மட்டுமல்ல; பெருவீரம், தன்னம்பிக்கை, நீதியுணர்வு, அபார சாகஸம் முதலான நற்குணங்களையும் நினைவூட்டியிருக்கும்.

இத்தகைய கதா காலட்சேபங்களில் கண்ட கும்பகர்ணனைக் கம்பன் பல கூறுகளாக வாழ்க்கையிலும் கண்டிருப்பான் என்பது நிச்சயம். தன்னுடைய நண்பன் இல்லத்திலே முதல் முதல் சந்தித்த கும்பகர்ணனுடைய அம்சங்களை நாட்டின் வேறு பகுதிகளிலும் பார்த்துப் பார்த்து அறிமுகம் செய்து கொண்டான் என்று சொல்லலாம்.

கதையிலும் வாழ்க்கையிலும் காணக் கிடைத்த கும்பகர்ணனை நீண்ட பகற் கனவுகளிலும் பார்த்துப் பார்த்துப் பழகிய பின்புதான், கதை வாயிலாக இக் கவிஞன் தமிழ் மக்களுக்குக் காட்டியிருக்க வேண்டும். சுருங்கச் சொன்னால் கம்பன் சித்திரிப்பது, தான் கண்ட கும்பகர்ணனையே.

வால்மீகியின் கதைப் போக்கை இங்கும் பின்பற்றத்தான் செய்கிறான். எழுப்புவது, அவன் உண்ணுவது போன்ற நிகழ்ச்சிகளை மட்டுமல்ல; கும்பகர்ண — ராவணர் சம்பாஷணை, கும்பகர்ணன் நற்புத்தி சொல்லுதல், யுத்த ஸந்நாகம், விபீஷணன் கும்பகர்ணனை ராமனுக்குத் தெரிவிப்பது, யுத்தம், வதை முதலான பகுதிகளையும் வால்மீகியின் சுவடுகளைப் பின்பற்றியே தெரிவிக்கிறான்.

தன்னுடைய வரிச் சித்திரத்திற்கு உறுதியான சில முக்கிய வரிகள் அல்லது கோடுகளையும் வால்மீகத்திலிருந்து எடுத்துக் கொள்கிறான் என்று கூடச் சொல்ல

லாம். எனினும் கம்ப சித்திரம் வேறு; வால்மீகியின் சித்திரம் வேறு.

தான் கண்டவாறு கும்பகர்ணனைச் சித்திரித்துக் காட்டுவதற்காகக் கதைப் போக்கிலும் வேண்டிய சில மாறுதல்களைச் செய்து கொண்டிக்கிருன் கம்பன்.

தொடக்கத்திலேயே வேறுபாடு

மகோதரன்தான் கும்பகர்ணனை ராவணனுக்கு நினைவூட்டுகிருன் கம்ப ராமாயணத்திலே. பாட்டனும் பேரனும் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது மகோதரன் திடீரென்று பிரவேசித்து 'அந்த அற்ப மனிதரைப் புகழ்வதே கும்பகர்ணனை இகழ்வதாகும்' என்று சொல்லுகிருனல்லவா! நாடகத் திறனுடன் அமைந்திருக்கும் இந்தத் தொடக்கம் கம்பனது சொந்தக் கற்பனை.

வால்மீகத்திலோ இந்த மகோதரன் கும்பகர்ணனை எழுப்பிய அரக்கர் கூட்டத்தில் ஒருவனுகக் காணப்படுகிருன். 'ராம லட்சுமணருடைய இரத்தத்தை நானே போய்க் குடித்துவிட்டுப் பிறகு என் தமையனுரைப் பார்க்கப் போகிறேன்' என்ற சினமொழி கேட்டதும், மகோதரன் புத்தி சொல்லுகிருன்.

உள்ளுக்குள்ளே மகிழ்ச்சிதான் மகோதரனுக்கு. எனினும் கும்பிடு போட்டு, 'சுவாமி! மகாராஜாவின் அபிப்பிராயத்தையும் அறிந்து கொண்டு குணதோஷங்களை ஆலோசித்துப் பிறகு சத்துருக்களைப் போரில் வெல்வதே நலம்' என்கிருன். இதே மகோதரன் ராவணனுக்குக் கும்பகர்ணன் நற்புத்தி சொன்னதும் கும்பகர்ணனைப் பழித்துப் பேசுகிருன்.

இந்த மகோதரனைக் கும்பகர்ணன் கண்டித்துப் பேசிய பின்பே போருக்குப் புறப்படுகிருன். இதே ஸர்க்கத்தில் ராவணன் கும்பகர்ணனுக்குச் சந்தனம், பூமாலை, மகர குண்டலம், தோள்வளை முதலான அணிகளை அணிவித்துப் போர்க் களத்திற்கு அனுப்பி வைப்பதும், கும்பகர்ணனைக் கண்டதுமே வானரர்கள் ஓடிப் போவதும் வருணிக்கப்படுகின்றன.

அடுத்த இரண்டு ஸர்க்கங்களில் கும்பகர்ண யுத்தமும், வதையும் நடை பெறுகின்றன. பிறகு ராவணன் புலம்புகிருன்.

கம்ப ராமாயணத்திலே, கும்பகர்ண குணுதிசயம் புது மெருகு பெறுவதுமட்டுமல்ல; ஒரு புதிய நாடகபாணியில் கம்ப சித்திரத்திற்கே உரிய கலைச் சிறப்புடன் உருவாக்கப் பெறுகின்றது.

'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று சொன்ன ராமன் கண்ணில் மீண்டும் எப்படி விழிப்பது என்பது ஒரு பெரும் பிரசினையல்லவா ராவணனுக்கு! அதற்காக ராவணன் சமாதானம் செய்து கொள்ளப் போகிருன—'கோசலநாடுடை வள்ள'லிடம் போய்!

> நாசம்வந்(து) உற்ற
> போது, நல்லதோர்
> பகையைப் பெற்றேன்!

என்றுதானே பாட்டனிடம் தெரிவித்தான்.

'பகைவனுக நீ மறுபடியும் ராமனைச் சந்திப்பதானுல் ஸர்வ நாசம் நிச்சயம்' என்று எச்சரிக்கை செய்த மாலியவான், 'சமாதான விருப்பத்துடன் நண்பனுகப் போய் ராமனைச் சந்திப்பதே நலம்' என்பதைக் குறிப்பாக உணர்த்தினுன். எப்படியாவது மறுபடியும் ராமன் கண்ணில் போய் விழித்துத் தானே ஆக வேண்டும்!

ராமன் முகத்தில் விழிக்க வேண்டிய அவசியமே இல்லை என்பது மகோதரன் கட்சி. கும்பகர்ணனைக் கண்டதும் வானரர்களோடு ராம லட்சுமணரும் ஓடி



ஒளித்துக் கொள்வார்கள் அல்லது கொல்லப்படுவார்கள் என்று உறுதி கூறினன்.

'அப்படியானல் நான் ராமன் கண்ணில் விழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. மகோதரன் சொன்னதே உறுதி' என்று துணிந்த ராவணன் மகோதரனுடைய ஆலோசனையைப் பெரிதும் மெச்சுகிருன். அனுமனுக்குப் பேரறிவாளன் என்ற ஒரு பட்டம் ராமன் சூட்டினன், தர்மாத்மாவான விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளலாமென்று சொன்னதற்காக. அதே பட்டத்தை இப்போது ராவணன் மகோதரனுக்குச் சூட்டுகிருன், ராமன் முகத்திலே மறுபடியும் விழிக்காமலிருப்பதற்கு ஆலோசனை சொன்னதற்காக.

சில சிறப்பியல்புகள்

'பேரறிவாளனே!' என்று மகோதரனை அழைத்துக் கொண்டாடிய பின் ராவணன் கும்பகர்ணனை எழுப்பப் பணியாளரை ஏவுகிருன். இந்தக் கட்டத்தைக் கம்பனும் வால்மீகி போல் ஹாஸ்யமாக நடத்துகிருன்.

பேருறக்கம்போல் கும்பகர்ணனுடைய பேருண்டியும் நகைச் சுவையுடன் வருணிக்கப் படுகிறது. கும்பகர்ணனை ராவணன் சாந்து பூசி அணி செய்வதிலும் கம்பனுடைய சிறப்பியல்பு ஒன்றையும் நாம் காணவில்லை.

கும்பகர்ணன் நற்புத்தி கூறுவதிலும், ராவணன் சினந்து விடை கூறித் தானே போருக்குப் புறப்பட முயல்வதிலும் அபராத க்ஷாமணம் செய்து கொண்டு கும்பகர்ணன் போருக்குக் கிளம்பி விடுவதிலும் கம்பனுடைய கும்பகர்ண சித்திரம் நம்மை நன்ருக வசீகரிக்கத்



தொடங்கி விடுகிறது. விபீஷணன் கும்ப கர்ணனை ராமனுக்குத் தெரிவிக்கும் கட்டத்திலே வசீகர உணர்ச்சி அதிகரிக்கிறது.

கும்பகர்ண—விபீஷண சம்பாஷணை ஒரு முக்கியமான கம்ப சித்திரம். இந்தச் சந்தர்ப்பத்தை இந்த இருவர் குணநிசயத்தையும் வளர விடுவதற்குக் கம்பன் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான். இந்தக் கட்டத்தின் அழகும் ஆற்றலும் அறிந்து அறிந்து அனுபவிக்கத் தக்கன.

கும்பகர்ண யுத்தத்திலே, அங்கதன் ஓடுகிற வானரர்களைத் தேற்றித் திருப்புவதும், அந்த வானரர்களைக் கும்பகர்ணன் முறியடிப்பதும், அனுமன் போர் புரிவதும், வானர வீரர்கள் முறிந்தோடுவதும், சுக்கிரீவனுக்கும் கும்பகர்ணனுக்கும் போர் நடப்பதும், மூர்ச்சை யடைந்த சுக்கிரீவனைக் கும்பகர்ணன் எடுத்துக் கொண்டு இலங்கை அடைவதும், சுக்கிரீவன் மூர்ச்சை தெளிந்து கும்பகர்ணனது செவிகளையும் மூக்கையும் ஒழித்து விட்டு மீளுவதும், கும்பகர்ணன் திரும்பி வந்து ராமனோடு போர் புரிந்து வதமாவதும், வானரர்களும் வானவரும் மகிழ்வதும் வால்மீகத்தில் நாம் காணும் முக்கிய நிகழ்ச்சிகள்.

கம்பனுடைய 'கும்பகருணன் வதைப் படல'த்திலே, விபீஷணன் கும்பகர்ணனைச் சந்தித்துச் சம்பாஷித்துத் திரும்பிய பின் கும்பகர்ணன் வானரர்களைப் படாத பாடு படுத்துகிறான். நீலன் கும்பகர்ணனுக்குத் தோற்றதும், அங்கதனும் தோற்றுப் போகிறான்.

பிறகு அனுமனுக்கும் கும்பகர்ணனுக்கும் போர் நடக்கிறது. கும்பகர்ணன் வல்லமை கண்டு அனுமன் அப்பால் போய் விடுகிறான். தேவர்கள் நடுங்குகிறார்கள். கும்பகர்ணன் தோள் கொட்டுகிறான்.

அப்பால் லட்சுமணனுக்கும் கும்பகர்ணனுக்கும் சண்டை நடக்கிறது. ஒரு பெருஞ் சண்டை. இந்த இருவர் வீரவாதம் ஓர் அதிசயமான கம்ப சித்திரம்.

கும்பகர்ணன் வேறொரு திசையில் போய்ச் சுக்கிரீவனோடு போர் செய்கிறான். சுக்கிரீவனைக் கும்பகர்ணன் தூக்கிக் கொண்டு போகிறான். ராமன் சினங் கொண்டு சரக்கூடம் கட்டிக் கும்பகர்ணன் போகும் வழியைத் தடுக்கிறான். ராமன் கும்பகர்ணன் மீது அம்பு எய்ததும் கும்பகர்ணன் மூர்ச்சை அடைகிறான். சுக்கிரீவன் உணர்வு பெற்று வானரர்களுடன் சேர்ந்து கொள்கிறான்.

காதையும் மூக்கையும் இழந்த பின்பும் கும்பகர்ணன் ஆர்ப்பாட்டம் செய்கிறான். ராமனுக்கும் கும்பகர்ணனுக்கும் சம்பாஷணை நடப்பதாகவும் சில பாடல்கள் தெரிவிக்கின்றன. கடைசியாக இரு கைகளும் அற்ற நிலையிலும் கும்பகர்ணன் வானரப் படையைக் கலக்குகிறான்.

கால்களையும் இழந்து கிடக்கும் போதும், ராவணனுக்காக இன்னும் எப்படிப் போர் செய்யலாம் என்ற சிந்தையும் செயலுமாகவே யிருக்கிறான் கும்பகர்ணன். இந்தச் சாகஸ நிலை கண்டு ராமனும் கை நடுங்கப் பெறுவதாய்க் கம்பன் கூறுகிறான்.

இனி, ஓர் இறுதிச் சித்திரம். கும்பகர்ணன் மரணத்திற்குச் சூரியன் மறையும் போது மேற்கு வானத்தில் ஏற்படும் வசீகர சோபையை அளிக்கும் ஒரு கற்பனை.

'ராவணனுக்காக உயிரைக் கொடுக்கிறோமே, தம்பி விபீஷணனுக்கு இந்த நிலையில் என்ன செய்ய முடியும்!' என்று சிந்திக்கிறது சகோதர வாஞ்சை நிறைந்த இந்த வீர நெஞ்சு. விபீஷணனை ராவண கோபத்திலிருந்தும் எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என்று எதிரியை மன்றாடிக் கேட்கவும் துணிகிறது இந்த வயிரம் பாய்ந்த உள்ளம்.

இப்படி விபீஷணனுக்காக வரம் கேட்டவன் தனக்காகவும் ஏதோ ஒரு வரம் கேட்பது போலக் காட்டி, 'இந்த மூக்கில்லாத முகத்தை முனிவர்களும் தேவர்களும் நோக்காதபடி என் கழுத்தை அறுத்துக் கடலில் போட்டு விட வேண்டும்' என்று ராமனை வேண்டிக் கொள்கிறான்.

இப்படி அஸ்தமனமாகிறது கம்பனது மனக்கண் முன் உதித்த கும்பகர்ண உருவம். ராமன் முகத்தில் ராவணன் உடனே விழிக்காமல் இருப்பதற்காகத் தன்னைப் பலி கொடுத்த கும்பகர்ணனைத் தமிழர்கள் என்றும் மறக்க முடியாத ஒரு காவிய பாத்திரமாக்கி விடுகிறான் கம்பன்.

இந்தப் பாத்திரத்திலே, கம்பன் கேட்டதும் கண்டதும் அனுபவித்ததுமான பல விஷயங்களும் ஒரு முகமாய்க் கலந்து மனோபாவத்தில் மாறிப் பிறந்து, இடம் பெற்றுள்ளன.

இந்தக் 'கும்பகர்ண வதைப் படல'த்தைப் படித்து முடித்ததும் கும்பகர்ண ஆகிருதி (ஸ்தூல ஆகிருதி மட்டுமல்ல) வால்மீகத்தில் இருப்பதை விட எப்படி வளர்ந்திருக்கிறது என்பதை ரஸிகர்கள் நன்குணர்ந்து கொள்ளலாம்.



105. பள்ளி யெழுந்தருளாயே!

கும்பகர்ணன் பெயரை மகோதரன் உச்சரித்ததுமே ராவணனுடைய சோர்வு பறந்து போகிறது. அந்த மலை போன்ற மேனியைக் கண்டதுமே பகைவர்கள் ஓடி ஒளித்துக் கொள்வார்கள் என்று மகோதரன் தொடர்ந்து பேசியதும், ராவணன் மனத்துள்ளே நம்பிக்கை மலை போல் வளர்ந்து விடுகிறது.

ராவண தூதரா, கால தூதரா?

மகோதரன் பேரன்பனுகக் காண்கிறுன்; பேரறிவாளனுகவும் வளர்ந்து விடுகிறுன். இறுதி காட்டியவனை உறுதி சொன்னவனுக மயங்குகிறது உள்ளம்.

உத்தரவு பிறக்கிறது; பணியாளர் பறக்கிறுர். இந்த நால்வரும் கும்பகர்ணனை அரண்மனைக்குத் தான் அழைக்கிறுர்களா?

ஸ்தூலமாக இப்படித்தான். ஆனல் இது ஒரு நீண்ட அழைப்பு என்கிறது கவிக் கூற்று.

திரை மறைவில் கால தேவதையும் நாலு தூதர்களை அனுப்பி வைக்கிறதாம்;

'நன்றிது கருமம்'
என்னு, 'நம்பியை,
நணுக ஓடிச்
சென்(று), இவண் தருதிர்'
என்ருன்; என்றலும்
நால்வர் சென்ருர்,
தென்திசைக் கிழவன்
தூதர் தேடினர்
திரிவர் என்னக்,
குன்றினும் உயர்ந்த
தோளான் கொற்றமாக்
கோயில் புக்கார்.

[நன்றிது – நன்று இது. கருமம் – செயல். என்னு – என்று சொல்லி. நம்பி – ஆடவரில் சிறந்தவன்; (இங்கே) சிறந்த தம்பியான கும்பகர்ணன், நணுக...தருதிர் – வந்து சேரும்படி அழைத்து வாருங்கள். இவண் – இங்கே, தென்திசைக் கிழவன் – யமன், கொற்ற மாக்கோயில் – வெற்றியுள்ள பெரிய அரண்மனை. புக்கார் – புகுந்தார்கள்.]

ராவண தூதர்களுக்கு யம தூதர்களை உபமானமாக்கி,

தென்திசைக் கிழவன்
தூதர் தேடினர்
திரிவர் என்ன

என்று காட்டுவது, 'ஐயோ, அந்த நித்திரைக்காரனுக்கும் விநாசகாலம் கிட்டி விட்டதே!' என்பது போன்ற ஓர் அனுதாப உணர்ச்சியைக் கேட்போர் உள்ளத்தில் தூண்டுகிறது.

இப் பாட்டின் இசை யமைப்பில் ஒரு வகைச் சோகம் கிடந்தது பெரு மூச்சு விடுவதை உணர்ந்து கொள்ளலாம்.

வெற்றிச் சின்னங்கள் தூக்கிய பெரிய அரண்மனையில் குகைக்குள்ளே ஒரு மலை போலக் கிடக்கிறுன் கும்பகர்ணன். 'இளவரசே! துயில் உணர்க' என்று கூப்பிட்டால் போதுமா?

வினோதப் பள்ளியெழுச்சி

ராவண கிங்கரர்கள் பள்ளியெழுச்சி பாடுகிறுர்களாம்:

உறங்கு கின்ற
கும்ப கன்ன!
உங்கள் மாய
வாழ்வெலாம்
இறங்கு இன்ற(து)
இன்று காண்,எ -
ழுந்தி ராய்,எ -
ழுந்திராய்;
கறங்கு போல
வில்பி டித்த
கால தூதர்
கையிலே
உறங்கு வாய்,உ -
றங்கு வாய்,
இனிக்கி டந்(து)
உறங்குவாய்!

[கும்பகன்ன — கும்பகர்ணனே. கறங்கு — காற்றுடி.]

'பணியாளர் சொல்லத்தகாத' வார்த்தை இது என்று கருதுவோர் உண்டு. ஆனால் அந்த ராவண ராஜ்யத்திலும் ஏழை மக்கள் உலகத்தை ஹிம்ஸிக்கும் கொடுங்கோன்மைக்கு விரோதமாகத் தானே யிருப்பார்கள்?

இவர்களால் எழுப்ப முடியவில்லை. ராவணனிடம் போய் எப்படி 'முடியாது' என்பது?

ராவணனுக்குத்தான் முடியாதது ஒன்றுமில்லையே; 'முடியாது' என்று சொன்ன நாக்கை அரிந்து விடக் கூடுமே!

'முடியாது என்றார்களே, அவர்களை முதல் முதல் முடித்து விடுவோம்!' என்று எஜமான் தீர்மானித்து விட்டால் என் செய்வது?

முதல் நாள் யுத்தத்தில் ராவணனுடைய தோல்வியையும் கண்டவர்கள், 'ராவணன் தான் முடிவதற்குள் தம்பியையும் முடித்து விடுவான்' என்று கருதுகிறார்கள். சக்கரவர்த்தியின் போக்கை வெறுக்கும் எளியவர் இவர்கள்.

ராவண ராஜ்யத்திலும் நல்லவர்களான எளியவர்கள் இருக்க வேண்டும் என்று கருதியே அங்கதன்,

ஏமம் சார,
எளியவர் யாவிரும்......
போமின்!

[ஏமம் சார—பாதுகாப்பை அடையும்படி. எளியவர் யாவிரும் — எளியவர்களான நீங்கள் எல்லாரும். போமின் — போய் விடுங்கள்.]

என்று இந்த எளியவர்களை நோக்கி எச்சரிக்கை செய்தான்.

அந்த எளியவர்களில் ராஜ்யத்தை விட்டு வெளியே போய்விட விரும்பாமலே ராவணன் போக்கைக் குறித்து வெறுப்புள்ளவர்களும் இருக்கக்கூடுமல்லவா!



மல்லர்களின் ஊஞ்சலாட்டம்!

இந்தக் கிங்கரர்களைத் தொடர்ந்து ஆயிரம் மல்லர்கள் கும்பகர்ணனை எழுப்ப அரண்மனைக்கு வருகிறார்களாம். இவர்களெல்லாம் அந்தக் கிங்கரர்களைப் போல் அந்த அரண்மனைப் பழக்கம் உள்ளவர்கள் அல்லர். எனவே, கும்பகர்ணனுடைய மூச்சுக் காற்றுக்கு இலக்காகாமல் உள்ளே போகத் தெரியவில்லையாம்.

இவர்கள் பட்ட பாடு பின்வருமாறு வருணிக்கப் படுகிறது.

நின்திறல் வீரன்
வாயில் திறத்தலும்,
சுவாத வாதம்

மண்டுற, வீரர்
எல்லாம் வருவது
போவ தாக,



கொண்டுறு தடக்கை
பற்றிக் குலமுடை
வலியி னாலே

கண்துயில் எழுப்ப
எண்ணிக் கடி(து) ஒரு
வாயில் புக்கார்.

[நின்திறல் வீரன் – மிக்க வலிமையுள்ள வீரனான கும்பகர்ணன். வாயில் – அரண்மனை வாசல், சுவாத வாதம் – சுவாசக் காற்று. மண்டுற – மிகவும் வீச. கொண்டுறு கொண்டு – பொருந்திய, தடக்கை பற்றி – பெரிய கைகளை ஒருவருக்கொருவர் பிடித்துக் கொண்டு, குலமுடை வலியினாலே – அப்படித் திரண்டுள்ள தம்முடைய வலியினாலே. கடிது– விரைவாக.]

பைத்தியக்காரத் தனமாக நேர் வாசலைத் திறந்து விட்டார்கள். மூச்சுக் காற்று அப்படியே வந்து வீச, வீரர்கள் தத்தளித்துப் போகிறார்களாம்.

அவன் மூச்சு இழுக்கும் போது இவர்களும் உள்ளே வருகிறார்கள்; மூச்சை வெளிவிடும் போது இவர்கள் போகிறார்கள்! வருகையும் போக்கும் இப்போது இவர்கள் வசமல்ல.

கும்பகர்ணனுடைய மூச்சே 'வா' என்று வரவேற்கிறது; 'போ' என்று துரத்தியும் அடிக்கிறது.

இப்படி உள்ளும் புறமுமாக ஊஞ்சல் ஆடுகிறவர்களுக்கு, 'அடடா, என்ன

தவறு செய்து விட்டோம்!' என்பது புலனுகிவிடுகிறது.

இந்த அபாயத்திலிருந்து எப்படியோ சமாளித்துக் கொண்டு பளிச்சென்று அவனை அணுகுவதற்கு ஒரு திட்டமும் வகுத்துக் கொள்கிறார்கள்.

ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு இந்த ஆயிரம் ஊஞ்சல்—மல்லர்களும் ஒரு சங்கிலியாகத் தங்களை அமைத்துக் கொள்கிறார்கள். இந்தச் சங்கிலித் தொடர், வலிமை கொண்டு ஒரு வாசல் வழியாக விரைந்து புகுந்து விடுகிறதாம்.

பள்ளியெழுச்சி—உபகரணங்கள்

இப்படிப் போய்த்தான் என்னபயன்! அந்தப் பிளந்த வாயையும் மூக்கையும் கண்கள் காண, உடல்கள் கிடுகிடுக்கின்றன.

இந்த ஆட்டத்தையும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, அவன் காதின் உள்ளே ஊதுகிறார்கள்—குழந்தைகள்,உறங்குகிறவன் காதில் ஊதுகிறமாதிரி! சங்கு ஊதுகிறார்கள். தாரை சின்னம் முதலான ஊது கருவிகளையும் ஊதி முழக்குகிறார்கள். இந்தப் பள்ளியெழுச்சி—வாத்தியங்களும் பயன்படவில்லை.

இனி, வாத்தியங்களுக்குப் பதில் ஈட்டியும் தண்டாயுதமும் சம்மட்டியும் வருகின்றன. அந்தக் கருவிகளில் வல்லவர்கள் ஒன்றுகூடித் தாடையிலும் மார்பு தலை முதலான உறுப்புக்களிலும் தாக்குகிறார்கள்.

இவர்களும் கை ஓய்ந்துபோகக் குதிரைகள் வருகின்றன. ஆயிரம் குதிரைகள் சாரி வருகின்றன. எங்கே! — கும்பகர்ணன் மார்பிலேதான்!

உடம்பைப் பிடித்துவிட்டது போன்ற பலன்தான் ஏற்படுகிறது. உறக்கம் அதிகரிக்கவே, 'தம்பி இனிது தூங்குகிறான்' என்ற செய்திதான் ராவணனுக்குக் கிடைக்கிறது.

'குதிரைக்குக் கால் ஓய்ந்து போயிற்று; எங்களுக்குக் கை ஓய்ந்து போயிற்று' என்று செய்தி சொல்லவே, ராவணனே எப்படியாவது எழுப்பித்தானாக வேண்டும் என்று ஒரே பிடிவாதம் பிடிக்கிறான்.

தன்னை விட்டு நீங்காத தம்பி இந்தத் தருணத்தில் உதவி செய்ய முன்வர வேண்டாமா! எத்தனை தேர்களும் படைகளும் எதிர்த்து வந்தாலும் அந்த நெஞ்சு பதைத்ததில்லையே!

ஆனால் எப்படி எழுப்புவது! சூலங்களால் குத்திப் பார்த்தார்கள். மழுப் படை கொண்டு எறிந்து பார்த்தார்கள். இப்படியெல்லாம் ஒரு யுத்தம் செய்து பார்த்தும், 'தூங்கினான் தூங்கினனே' என்றால், என்னதான் செய்ய முடியும் எப்படித் துயிலெழுப்பிக்கொண்டு வர முடியும்?

எனினும் லங்கேச்வரனுடைய ஆணை விளையுமா? எப்படியாவது துயிலெழுப்பிக்கொண்டு வந்துதான் ஆகவேண்டும் என்று கர்ஜிக்கிறான்:

'இடைபெரா இளையானை,
இணைஆழி மணிநெடுந்தேர்
படைபெரா வரும்போதும்
பதையாத மார்பானை,
மடைபெராச் சூலத்தால்
மழுவாள்கொண் டெறிந்தாலும்
புடைபெராத் துயிலானைத்
துயிலெழுப்பிக் கொணர்
கென்றான்.

[இடைபெரா இளையானை – என்னை விட்டு நீங்காத தம்பியை, பேராவரும் போதும் – புடை பெயர்ந்து தன்னைத் தாக்க வரும்போதும். மடை – கட்டு, பேரா – குலையாத.]

'யாராவது போய் எப்படியாவது எழுப்பித்தானாக வேண்டும்' என்ற ராவண கர்ஜனை காதில் விழுந்ததும், 'எப்போது தான் சக்கரவர்த்தியின் தயவு நமக்குக் கிடைக்கப் போகிறதோ!' என்று ஏங்கியிருந்த சில அரக்கர்கள். பளிச்சென்று அடி வணங்கி அந்த ஆணையைச் சிரமேல் தாங்கிப் போகிறார்கள்.

விழித்தான், எழுந்தான்

ஐந்து ஆறு பேராக இரு புறமும் நின்று நீண்ட உலக்கைகளைக் கொண்டு இரண்டு கன்னங்களிலும் ஏக காலத்தில் இடிக்கவே, கும்பகர்ணனுடைய உடம்பும் அசைந்து கொடுக்க, விழிப்பு வந்து விடுகிறதாம்.

* * *

வால்மீகியைப் போல் கம்பனும், பாமரரும் ரஸிக்கத்தக்க நகைச்சுவையுடன் கும்பகர்ணனைத் தோற்றுவிக்கிறான் தன் அரங்க மேடையில். இந்தக் கட்டத்திலே கம்பனுடைய சிறப்பியல்பாக ஒன்றையும் நாம் பார்ப்பதற்கில்லை.

ஆனால் இந்தக் கும்பகர்ண சித்திரம் படிப்படியாக வண்ணமும் சுவையும் ஏறப் பெற்று, எவ்வளவு வசீகரமாகப் போகிறது!



106. பரியோ பரி!

'அகப்பையால் அள்ளிப் போடுவது போதுமா? தவலையை அப்படியே தட்ட வேண்டியதுதான்!' என்று பெருந்தீனிக்காரனைக் குறித்துக் கிண்டல் செய்வது உண்டு. பெருங் குடியனைப் பற்றியோ, 'குடங்குடமாய்க் குடிக்கிறான்' என்று சொல்லுகிறோம். இப்படிச் சொல்வதால், பெரும் பசியிலும் பெருந் தீனியிலும் பெருங்குடியிலும் உள்ள பேராசையைச் சித்திரித்து மனக் கண்ணுக்கு இலக்காக்கிக் காட்ட முடிகிறது.

மூவகைப் பசி

பெரும் பசியில் சில ரகங்களைப் பகாசுரப் பசியென்றும், குண்டோதரப் பசியென்றும், கும்பகர்ணப் பசியென்றும் புராண இதிகாசங்கள் வருணித்திருக்கின்றன.

பச்சைக் காய்கறிகளையும் இச்சித்துப் புசிக்குமாம் குண்டோதரப் பசி. சமையல் ஆக வேணுமேயென்று காத்திருக்க வேண்டியதில்லை.

பகாசுரனுக்கோ சமைத்த உணவு வகைகளை வண்டிச் சுமையாகக் கொண்டு போக வேண்டுமாம். வண்டியிலுள்ள உணவுகளுடன் ஓட்டி வந்த ஆளையும் புசித்து விடுவானாம். வண்டிதான் மிச்சம்!

கும்பகர்ணப் பசி வால்மீகத்திலும் வருணிக்கப்படுகிறது; கம்ப ராமாயணத்திலும் வருணிக்கப்படுகிறது.

கம்பன் பின்வருமாறு வருணிக்கிறான்:

ஆறு நூறு
சகடத்(து) அடிசிலும்,
நூறு நூறு
குடங்களும் நுங்கினான்,
ஏறு கின்ற
பசியை எழுப்பினான்,
சீறு கின்ற
முகத்(து)இரு செங்கணான்.

[சகடத்து – வண்டியிலுள்ள. அடிசிலும் – சோற்றையும். நுங்கினான் – ஆவலோடு பருகினான். இரு செங்கணான் – இரண்டு சிவந்த கண்களையுடைய கும்பகர்ணன்.]

வண்டி வண்டியாகச் சோற்றை உண்டு தீர்த்து விடுகிறான். கணக்குப் பார்த்தால் அறுநூறு சோற்றுச் சகடங்கள் 'காலி'யாகிவிடுகின்றனவாம்.

'உண்ட ரொட்டியைக் குடித்த மதுவிலே மிதக்கச் செய்தான்' என்று வருணிப்பது உண்டு. எனவே, அன்னத்திற்குப் பானம் அனுபானம் அன்று: 'அனுபந்த'மும் அன்று.

'ஆறுநூறு சகடத்து அடிசில்'யும் மிதக்கவிட வேண்டுமே; அதற்குக் குடங்குடமாய்ப் பானம் செய்து கொண்டேயிருக்க வேண்டுமல்லவா!

கும்பகர்ணனுக்கோ அவசரம்—பசியின் அவசரம். கொஞ்சங் கொஞ்சமாகச் சாப்பிட நேரம் எங்கே? வண்டி வண்டியாகச் சாப்பிட்டு ஆறு நூறு சகடங்களையும் 'காலி' செய்து விட்டான்.

கள்ளுக் குடங்களிலோ நூறே ஒன்றின் ஸ்தானத்தை வகிக்கிறது. அது பசியின் ஆத்திரம் என்றால், இது தாகத்தின் கோரம்!

இப்படியாவது பசிக்கும் தாகத்திற்கும் சாந்தி கிடைக்கிறதா? அதுதான் இல்லை.

ஏறு கின்ற
பசியை எழுப்பினான்!

பசியனுக்குக் கொஞ்சம் உணவு கிடைத்தால், முன் இருந்த பசி அதிகமாய்த் தோன்றக் கூடுமல்லவா! அதுகூட அல்ல இப்போது கும்பகர்ணன் நிலை.

பசியைத் தூண்டி விடும் 'லேகியம்' போலத்தான் பயன் பட்டனவாம் 'ஆறு நூறு சகடத்து அடிசிலும், நூறு நூறு குடங்களும்.'

இந்தச் செய்யுளில் இந்தக் 'குடிய'னுடைய முகத்தையும் பார்த்து விடுகிறோம்:

சீறுகின்ற
முகத்(து)இரு செங்கணான்.

கண்கள் இரண்டும் சிவந்து, சிறிக்கொண்டிருக்கிற அந்த முகத்திலிருந்து குதித்து விடுமோ! — என்று தோன்றுகிறதாம். குண்டோதர பகாசரப் பசிகள் எங்கே! இந்தக் கும்பகர்ணப் பசி தாகம் எங்கே!

ஏன் சிற்றுண்டி

இப்படிப் பசியைத் தூண்டக்கூடிய ஒருவகை 'லேகியம்' போன்ற சிற்றுண்டியுடன் கும்பகர்ணன் திருப்தி அடைய வேண்டியதுதான் இச்சமயம். ராவணனுடைய கருத்திற்கு இணங்க அரக்கர்கள் முன்னெச்சரிக்கையாகச் செய்திருக்கும் ஏற்பாடு இது எனக் கருதலாம்.

ஏனென்றால், ராவணன் செய்தி தெரிவித்துக் கும்பகர்ணனைப் போருக்குப் போகச் சொல்லும்போது, 'உனக்குப் போஜனம் (பெருண்டி) போர்க்களத்திலேதான்; வானரப் பெருஞ்சேனையுடன் வால் இல்லாத நரங்கள் (மானுடப் பிறவிகள்)



வந்திருக்கின்றன, உடம்பைக் கொழுக்க வளர்த்துக்கொண்டு;' என்று பொருள் படப் பேசப் போகிறான்.

அந்தப் பேச்சை இப்போதே கேட்டு விடுவோம் :

'வான ரப்பெருந் -
தானையர் மானிடர்
கோந கர்ப்புறம்
சுற்றினர், கொற்றமும்
ஏனை உற்றனர் ;
நீ,அவர் இன்னுயிர்
போன கத்தொழில்
முற்றுதி போய்'என்றான்.

[தானையர் – சேனையை உடையவராய். கோநகர்ப்புறம் – நமது தலைநகரத்தின் புறத்தை. சுற்றினர்–முற்றுகை செய்து. கொற்றமும் ஏனை–ஏனைக் கொற்றமும் ; எவரும் பெறாத வெற்றியையும். உற்றனர்–பெற்றுள்ளார். இன்உயிர் – இனிய உயிரை. போனகத் தொழில்–போஜனம் செய்கிற தொழிலை. முற்றுதி–முடித்துக் கொள்வாய்.]

'உன்னுடைய போஜனத் தொழில் முற்றுப் பெறவில்லை யென்பதை நான் அறிவேன். என் உத்தரவுப்படியே உன்



பெரும் பசியை மேலும் அதிகமாய்த் தூண்டி விடுவதற்குரிய சிற்றுண்டியைத் தான் உனக்குக் கொடுத்து அழைத்து வந்திருக்கிறார்கள்' என்ற குறிப்பு ராவணனுடைய பேச்சில் அமைந்து கிடப்பது போலக் காண்கிறது.

கும்பகர்ணனை எழுப்புவதற்குப் பட்ட பாடு கொஞ்சமா! பேருறக்கத்திலிருந்து பெரும் பசிக்கு வந்திருப்பவனுக்குப் பெருந் தீனி கிடைத்து, 'உண்ட மயக்கம் தொண்டனுக்கும் உண்டு' என்ற நிலையில் மறுபடியும் உறங்கிப் போய்விட்டால், என் செய்வது! ராவணனும் அரக்கர்களும் முன் யோசனையுடன் நடந்து கொண்டிருப்பதாய் யூகிப்பது தவறாகாது.

நடந்ததும் நுழைந்ததும்

இனி நாம் சற்றுப் பின்வாங்கிக் கும்பகர்ணன் ராவணனைச் சந்திப்பதற்கு முன் சிற்றுண்டி பெற்றுச் சீறிக் கொண்டிருந்தானே, அந்த இடத்திற்கு மெல்லப் போய்ச் சேர்ந்துவிட வேண்டியதுதான்.

சீறுகின்ற முகத்திலே செவேரென்று ஜொலித்த அந்தப் பார்வைக்கு அஞ்சாமலே, 'கொஞ்சம் உணவை உட்கொண்டு தானிருக்கிறான்' என்ற தைரியத்துடன் சில அரக்கர்கள் எதிரே போய், 'உங்கள் தமையனார் கூப்பிடுகிறார்' என்று சொல்லுகிறார்கள். உடனே மலை கிளம்பி விடுகிறதாம்.

மற்ற அரக்கர்களைப் போல் கும்பகர்ணனை அடிக்கடி நகர வீதிகளில் சந்திக்க முடியாது. நெடுந் தூக்கத்திற்குப் பின் கிடைக்கக் கூடிய அபூர்வ தரிசனம் தானே! இப்பொழுதோ எதிர்பாராத நிலையில் உறக்கம் குலைக்கப்பட்டு ராவணன் முன்பு அழைத்து வரப் பெறுகிறானல்லவா!

திடீரென்று கும்பகர்ணனைக் கண்டதும் நகரம் அல்லோலகல்லோலப் படுகிறது. இந்த இரைச்சலைக் கேட்கிறோம்; பெரிய வாசலில் குனிந்து நுழைந்து போய் அரண்மனையை அடையும் கும்பகர்ணனையும் பார்க்கிறோம் — இச் செய்யுளிலே :

'கூயி னன்நுமுன்'
என்(று)அவர் கூறலும்,
போயி னன்,நகர்
பொம்மென்(று) இரைத்தெழ,
வாயில் வல்லை
நுழைந்து மதிதொடும்

கோயில் எய்தினன்,
குன்றன கொள்கையான்.

[கூயினன் — கூவினன்; கூப்பிட்டான். நுமுன் — நும்முன்; உம்முடைய தமையன். அவர் — அந்தப் பணியாளர்கள். நகர் பொம்மென்று இரைத்து எழ — நகரத்தவர் பொம்மென்று இரைச்சல் போட்டுக் கொண்டு கிளம்பி வர. வாயில் — வாசலில். வல்லே — விரைந்து. மதிதொடும் கோயில் — சந்திரனை அளாவியதென்று சொல்லும்படி உயர்ந்து ஓங்கிய அரண்மனையை. எய்தினன் — அடைந்தான். குன்றன கொள்கையான் — குனிந்து நுழைந்த நிலையில் குன்று போலத் தோன்றிய கும்பகர்ணன்.]

சந்திப்பு

கும்பகர்ணன் ராவணனைச் சந்திக்கப் போகிறான். இந்தச் சந்திப்பிற்கு முன் ராவணன் மனநிலை என்ன! கும்பகர்ணனைக் கண்டதும் அந்த மனப்பான்மை எப்படி எப்படி மாறி வருகிறது!

ஓர் அதிசயச் செய்யுளில் கண்டு கொள்ளலாம், இப்போதுள்ள நிலையில் லங்கேச்வரனுடைய அகத்தையும் முகத்தையும்.

அந்த அரண்மனையைச் சூழ்ந்து கிடக்கும் நெடுமதில் கடலைத் தாக்கி நெருக்கிப் பின்னே தள்ளிக் கொண்டிருப்பது போல் கட்டப் பெற்றிருக்கிறது. மண்ணோடு விண்ணையும் ஆக்கிரமித்தவன் கட்டி வைத்த மதில் அல்லவா!

கடலையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் நெடுமதிலைச் சார்ந்து அமைத்திருக்கும் கோபுரத்தில் கடல் அலைகள் வந்து வீசுகின்றனவாம். அப்படிக் கடலைத் தள்ளிக் கொண்டு நிமிர்கின்றன நெடுமதிலும் கோபுரமும். காலவெள்ளத்தை எதிர்த்து நிற்கும் ராவணன் ஆட்சிக்கு ஒரு நினைவுக் குறி.

முதற் போரில் தோல்வியுற்ற பின் இந்த நினைவுக் குறி வேறு நினைவுகளை எழுப்பலாயிற்று. எவ்வளவு காலம் இந்த நெடுமதிலும் கோபுரமும் கடலை இப்படி மோதி மிதித்துக் கொண்டிருக்க முடியும்!

இவை கடல் வெள்ளத்தில் மூழ்கிப் போய் விடுமோ! கோபுரத்தில் வீசும் அலைகள் இவற்றின் வலிமைக்குச் சான்று பகர்ந்தது போய் 'விரைவில் இவையெல்லாம் மூழ்கிப் போகவும் கூடும்' என்பதற்கே சான்றாகத் தோன்றலாயின.

'உலக நிலையாமை, உடல் நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை' என்றெல்லாம் துறந்தவர்கள், வெறுத்தவர்கள் பேசுகிறார்களல்லவா! அந்த நிலையாமை ராவணனையும் பிடிக்கத் தொடங்கி விட்டது.

கும்பகர்ணன் தன்னை நோக்கி வருவதைக் கண்டதும் 'நிலையாமை' நழுவிப் போகிறதாம்:

நிலைகி டந்த
நெடுமதில்—கோபுரத்து
அலைகி டந்த
இலங்கையின் அண்ணலைக்
கொலைகி டந்தவேல் —
கும்ப கருணன்,ஓர்
மலைகி டந்தது
போல வணங்கினான்.

'நிலையாமை சால நிலைபெற்ற' உலகத்திலே இந்த நெடுமதில் நிலைத்து விட்டது; இந்தக் கோபுரமும் நிலைத்து விட்டது. இவை நிலையாகக் கிடக்கும் என்பதற்கு அந்த அலைகளே சான்று. இப்படித் தோன்றுகிறது லங்கையின் அண்ணலுக்கு, கும்பகர்ணன் அண்ணனுக்கு.

அந்த வேல் தான் எவ்வளவு நம்பிக்கையை வளர்த்து விடுகிறது! 'கொலை கிடந்த வேல்' அல்லவா! எத்தனை கொலைகளைச் செய்து இந்த மகாராஜ்யத்தை இப்படி வளர்த்து விட்டிருக்கிறது!

இந்தச் சந்தர்ப்பத்திலும் கொஞ்சம் உணவு கிடைக்கத்தான் செய்கிறது கும்பகர்ணனுக்கு! தன்னுடன் உட்கார வைத்துக் கொண்டு இரத்தம், கள், மாமிசம் ஆகிய இவற்றை ஊட்டுகிறான் அண்ணன்.

சகோதர வாஞ்சையைக் கிளப்பிவிட மட்டும் அல்ல; போர்ப் பசியோடு வயிற்றுப் பசியையும் கிளப்பத்தான்!

நகைகளைப் பூட்டுகிறான். கடல்நுரை போன்ற வெண்பட்டாடையைத் தம்பிக்கு உடுத்துகிறான். வீரபட்டம் கட்டுகிறான். சந்தனம் பூசுகிறான்.

கவசத்தையும் கட்டிவிடுகிறான். இருந்த இடத்திலிருந்து கட்டமுடிய வில்லையாம் —கும்பகர்ணனுடைய சுற்றளவு அப்படி. அண்ணன் தம்பியைச் சுற்றி வந்துதான் கவசம் கட்டவேண்டி யிருக்கிறது.

இப்போது தம்பி கேட்கிறான், 'அண்ணா ஏன் இந்த அலங்காரம்! — இந்த ஆயத்தம்! என்ன காரணம்!' என்பதாக.

இந்தக் கேள்விக்கு விடையாகத்தான் ராவணன், 'தம்பி, உன் போஜனம் இன்னும் பூர்த்தியாக வில்லையே; இரையோ விளைந்து வந்திருக்கிறது; உன்னைத் தேடி வந்திருக்கிறது; ஊரைச் சுற்றிக் கிடக்கிறது!' என்கிறான்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

107. கும்பகர்ணன் புத்திமதி

'என்ன உபசாரமோ!' என்று அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு 'என்ன ஆயத்தமோ!' என்று கேட்டு விட்டான்.

கள், மாமிசம் முதலியவற்றைக் கொஞ்சம் ஊட்டிப் பசியை மேலும் கிளப்பி விட்ட பின், ஆடையாபரணங்களையும் அணிவித்தானல்லவா! நெற்றியில் வீர பட்டம் கட்டியதுமே 'போருக்கு ஆயத்தம் நடக்கிறது' என்று தெரிந்து விட்டது.

நெஞ்சும் வயிறும்

சிவப்புச் சந்தனம் பூசினான் தமையன் தம்பி நெஞ்சிலே, அந்த அஞ்சா நெஞ்சின் இரத்த வெறிக்கு அறிகுறியாக. சுற்றி வந்து அண்ணன் கவசம் கட்டுவதற்குள்ளே 'போர் ராமலட்சுமணர்களோடு தான்' என்பதும் தம்பியின் நினைவிற்கு வந்திருக்க வேண்டும். 'என்ன காரணம்!' என்று கேட்கும் போதே நெஞ்சு நேராக இல்லை.

'என்னவோ செய்கிறதே!' என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறோமல்லவா! கும்பகர்ணனுக்கு நெஞ்சுத் துடிப்பு, இடப்புருவத்திலும் தோளிலும் உணரப் படுகிறதாம்.

தம்பி கேள்விக்குத் தமையன் பதில் சொல்லுகிறான். 'தம்பி, உன்னுடைய போஜனத் தொழில் இன்னும் முற்றுப் பெறவில்லையே; அதைப் பூர்த்தி செய்து கொள். இப்போது போஜனம் உன்னைத் தேடி வந்திருக்கிறது! வாய்ப்பு நேர்ந்திருக்கிறது' என்கிறான்.

ராவணன் முழு வார்த்தையும் இது;

'வான ரப்பெருந்
தானையர், மானிடர்,
கோந கர்ப்புறம்
சுற்றினர், கொற்றமும்
ஏனை யுற்றனர்;
நீ அவர் இன்னுயிர்
போன கத்தொழில்
முற்றுதி போய்' என்றான்.

[தானையர் — சேனையை உடையவராய். கோநகர்ப் புறம் — சிறந்த நமது நகர்ப் புறத்தை. சுற்றினர் — முற்றுகை செய்து. கொற்றமும் ஏனை—ஏனைக் கொற்றமும்; எவரும் பெறாத வெற்றியும். உற்றனர் — பெற்றுள்ளார். அவர் இன்னுயிர் போனகத் தொழில் முற்றுதி — நீ அவர்களுடைய இனிய உயிரைப் போஜனமாகக் கொள்கின்ற தொழிலை முடித்துக் கொள்வாய்.]

தம்பியை அண்ணன் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறான். முகம் போல் அகத்தையும் பார்த்துத் தீர்ந்திருப்பதாகவே எண்ணம். ஆனால் உண்மை என்ன!

'தீவினையில் விருப்பமுள்ளவன் தான் இந்தத் தம்பி; அந்தத் தம்பி போல் அப்படித் தருமப் பித்தம் தலைக்கேறி விடவில்லை என்பதை நன்கு அறிந்து கொண்டிருந்தான்.

மந்திராலோசனை மன்றத்திலே கும்பகர்ணன், ராம பத்தினியைத் தான் கவர்ந்த செயலைக் கடுமையாகக் கண்டித்தது நன்றாக நினைவில் இருக்கத்தான் செய்கிறது ராவணனுக்கு. ஆனால் அது வீரமாகிய தர்மத்திற்குக் குறைவானது என்று தானே அப்படி வெறுத்துரைத்தான்?

'இனி அவனை விட்டுவிடுவதும் வீர தர்மத்திற்குக் குறைவாகும் என்றுதானே கும்பகர்ணன் அபிப்பிராயப்பட்டான். கடைசியாக, அரக்கர் சேனை முழுவதும் கடலைக் கடந்து போய் நரர்களையும் வானரர்களையும் ஒருங்கே வம்ச நாசம் செய்து விடவேண்டும் என்று கூறி முடித்தானல்லவா!

இந்த நிலையில், கும்பகர்ணனுக்கு மீண்டும் வீரதர்மம் குறித்துச் சிந்தனை செய்ய அவகாசம் கொடுத்து விடாமல் வயிற்றுப்பசியோடு போர்ப்பசியையும் தூண்டிவிடுவது எளிது என்பது ராவணன் கருத்து.

போன கத்தொழில்
முற்றுதி போய்!

என்றதும் கும்பகர்ணன் போய்விடுவான் என்றே நம்பிவிடுகிறான்.

ஆனால் அந்த எண்ணத்திற்கு மாறாக,

ஆனதோ வெஞ்சமம்?
அலகில் கற்புடைச்
சானகி துயர்இனம்
தவிர்ந்த தில்லையோ

[வெஞ்சமம் – கொடிய போர். அலகில் – எண்ணவும்முடியாத சிறப்புள்ள. இனம்– இன்னம்.]

என்று கும்பகர்ணன் கேட்டதும், ராவணன் திகைத்துப் போகிறான். பேசுவது விபீஷணனா? – கும்பகர்ணனில்லையா?

கும்பகர்ணன் தொடர்ந்து,

வானமும் வையமும்
வளர்ந்த வான்புகழ்
போனதோ? புகுந்ததோ
பொன்றும் காலமே?

[பொன்றும் காலம் – நாச காலம்.] என்று பேசும்போது, கும்பகர்ணன்தான் பேசுகிறான் என்பது தெளிவாகிவிடுகிறது.

ஏனென்றால் வலிமை வளர்த்த அரக்கர் புகழை, வானமும் வையமும் கவர்த்த களவுச் செயலை 'வான்புகழ்' என்று விபீஷண இருதயம் ஒப்புக் கொள்ள முடியுமா?

'கற்பின் செல்வியை விட்டிலையோ!' என்கிறான். ஆனால்,

புலத்தியன் வழி
முதல்
வந்த பொய்யறு
குலத்தியல்(பு)

என்று குலப் பெருமை தோன்றவும்பேசுகிறான்.



ராவணன் பொறுத்துக் கேட்கிறான். கும்பகர்ணனே,

கொடுத்தனை இந்திரற்(கு)
உலகும் கொற்றமும்;
கெடுத்தனை நின்பெருங்
கிளையும் நின்னையும்!

[கொற்றமும் —வெற்றியையும். கிளையும்— சுற்றத்தாரையும்.]
என்று பேசுகிறான்.

கோபத்திற்கு அணைகட்டி வைத்து விட்டு, ராவணன் மேலும் பொறுத்துப் பார்க்கிறான். கும்பகர்ணனே,

வஞ்சமும் பாவமும்
பொய்யும் வல்லநாம்
உஞ்சுமோ?

[உஞ்சுமோ — உய்வோமோ; பிழைப் போமோ!]

என்று பேசுகிறான்.

ராவணன் பொறுமைக்கு மேலும் ஒரு சோதனையாக வந்து விழுகிறது கும்பகர்ணன் வார்த்தை; ராவணனே அணையைப் பெரிதாக்கிக் கொள்கிறான்:

காலினிற் கருங்கடல்
கடந்த காற்றது
போலவன் குரங்(கு)உள;
சீதை போகிலன்;
வாலியை உரங்கிழித்(து)
ஏக வல்லன
கோல்உள; யாம்உளேம்:
குறைஉண் டாகுமோ?



[காலினின் — கால்களினால். காற்றது போல — காற்றைப்போல. வன் குரங்கு— வன்மையுடைய குரங்கு. உள — உண்டு. உரம் — மார்பு. ஏக — செல்ல. வல்லன கோல் உள — வல்லமையுள்ள அம்புகள் உண்டு. யாம் உளேம் — நாங்களும் இருக் கிறோம்.]

கடைசியாக ராவணனுடைய பொறு மையை முற்றும் சிதைத்து விடுகிறது கும்பகர்ணன் வார்த்தை:

தையலை விட்(டு)அவன்
சரணம் தாழ்ந்து,நின்
மையறு தம்பியோ(டு)
அளவ ளாவுதல்
உய்திறம்!

[தையல் — (இங்கே) சீதை. அவன் சர ணம் — அந்த ராமனுடைய பாதங்களில். மையறு — குற்றமற்ற. அளவளாவுதல் — மனங்கலந்திருப்பது. உய்திறன் — உயிர் பிழைக்கும் வழி.]

வெள்ளம் ஒரே அடியாகப் பெருகி அணையை உடைத்து விடுகிறது. இதற்கு மாறாக, 'எல்லாரும் சேர்ந்து போய் ராட்சஸ பலம் முழுவதையும் ஒரு சேரப் பகைவர் மீது செலுத்திப் பார்ப் போம்' என்ற ஆலோசனையையும் வெளி யிடுகிறான் கும்பகர்ணன். ஆனால் இது ராவணன் செவிகளில் விழவேயில்லை.

மந்திராலோசனை மன்றத்திலும் கும்ப கர்ணன் கடைசியாகச் சொன்னது இது. அப்போது, 'எதிரிகள் இலங்கைக்கு வரு வதற்கு முன்பே அரக்கர்களை யெல்லாம் ஒரு சேரத் திரட்டிக் கொண்டு போய்ப் பகைவர்களை ஒழித்து விடுவோம்' என் றான். இப்போதோ 'அவர்கள் படை யெடுத்து வந்துவிட்டார்கள். இனிமேலா வது நாம் ஒரு சேரப் போய்ப் போர் செய்து பார்ப்போம்' என்கிறான்.

அப்போது அந்த வார்த்தை கேட்டு ராவணன், 'நன்று உரைசெய்தாய், குமர! இனி ஆராய்ச்சி செய்வது பழுது; பகை வர்களை யெல்லாம் கொன்று திரும்பு வோம்' என்று இசைந்து மறுமொழி சொன்னான். இப்போதோ, அதே வார்த் தையைக் கும்பகர்ணன் முடிவாகக் கூறி யும், அதைக் காதிலேயே போட்டுக் கொள்ள வில்லை.

இவ்வளவு தூரம் ராவண கோபம் பொங்கி விட்டது என்பதைத் தெரிந்து கொள்ளாமலே கும்பகர்ணன் பேசி முடிக்கிறான்:

'பந்தியின் பந்தியின்
படையை விட்(டு)அவை
சிந்துதல் கண்டுநீ
இருந்து தேம்புதல்
மந்திரம் அன்று; நம்
வலியெ லாம்உடன்
உந்துதல் கருமம்' என்(று)
உணரக் கூறினான்.

[பந்தி - வரிசை. சிந்துதல் – (இங்கே) ஒழிந்து போவது. தேம்புதல் – வருந்துதல். மந்திரம் – ஆலோசனை. வலி – வலிமை. உந்துதல் – செலுத்துதல். கருமம் – செய்கை.]

உணரக் கூறினான் கும்பகர்ணன்; ஆனால் ராவணன் உணர்ந்து கொண்டானில்லை. லோகம் கற்றிருப்பது போல் அவ்வளவு நன்றாகக் கும்பகர்ணனுடைய நெஞ்சையும் கற்றிருந்ததாக எண்ணிக் கொண்டிருந்தவன் தான்! உண்மையில், தம்பி வயிற்றைத் தெரிந்திருந்தது போல் நெஞ்சைத் தெரிந்து கொண்டிருக்க வில்லை!

கரையுமில்லை: கண்ணுமில்லை!

கும்பகர்ணன் மீது பொங்கிய கோபத்திலே ராவணன்,

அறிவுடை அமைச்சன் நீ
அல்லை

என்றே சொல்லி விடுகிறான். நீ கூவின படி செய்ய வேண்டிய பணியாளன் தான் என்பது குறிப்பு.

கோபம் பொங்கி விட்டால், கங்கு கரை ஏது?

'அறிவுடை அமைச்சன் நீ
அல்லை; அஞ்சினை;
வெருவி(து)உன் வீரம்'என்(று)
இவைவி ளம்பினான்

[வெருவிது – வீணானது.]

அருமைத் தம்பி மனம் எப்படி உளைபுமோ என்பதைக் கோபம் பார்க்கவில்லை. 'போருக்கு உரிமை இழந்தாய்; உடம்பை வளர்த்தாய், மாமிசத்தோடு கள்ளையும் பெற்று! போய் உறங்கு இரவும் பகலுமாக!' என்று கர்ஜிக்கிறான்.

ராவணகோபம் தணிந்தபாடில்லை:

'மானுடர் இருவரை
வணங்கி, மற்றும்அக்
கூனுடைக் குரங்கையும்
கும்பிட்(டு) உய்தொழில்
ஊனுடை உம்பிக்கும்
உனக்கு மேகடன்;
யான்அது புரிகிலேன்;
எழுக போகென்றான்.

[உய்தொழில் – உயிர்பிழைக்கும் தொழில். ஊனுடை உம்பிக்கும் – தன் உடம்பை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று கருதியிருக்கும் உன் தம்பி விபீஷணனுக்கும். புரிகிலேன் – செய்யேன். எழுக போகென்றான் – எழுந்து போவாய் என்றான்.]

இப்படிச் சொல்லி விட்டு ராவணன் கும்பகர்ணன் முகத்தைப் பார்க்கவும் வெட்கம் அடைந்தவன்போல் ஒரு வேலைக்காரனை நோக்கித் திரும்பி, 'கொண்டுவா என் தேரையும் ஆயுதங்களையும்' என்று கட்டளையிடுகிறான்.

கும்பகர்ணன் வெறுப்படைய வில்லை; கோபமடையவும் இல்லை. இந்த முரட்டுத் தம்பியின் இந்தச் சகோதர பாசம் எவ்வளவு அதிசயமானது!

* * *

இந்த அதிசயத்தைத் தொடர்ந்து காண்பதற்கு முன், கும்பகர்ணன் எப்படி விபீஷண ஆவேசத்துடன் பேசி விட்டான் என்பதற்கு உரிய காரணத்தைக் கண்டு கொள்ள முயல வேண்டும். மந்திராலோசனை மன்றத்திலே வீரதர்மத்தை அடிப்படையாகக் கொண்டு கும்பகர்ணன் பேசி முடித்ததும் விபீஷணன் தரும விரதத்தையே அடிப்படையாகக் கொண்டு தன் கருத்தை வெளியிட்டானல்லவா!

அதைக் கேட்டதும் அப்படியே உறங்கப் போனவன் தான். அந்த உறக்கம் ஒரு வசிய நித்திரையாகி விபீஷணன் கொள்கையை அப்படியே இந்த இருதயத்தில் பதியவைத்தது. துயிலெழுப்பியதும் அதே உணர்ச்சியுடன், அந்தச் சகோதர பாசத்துடன் எழுந்து வந்து விட்டான்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ

108. பாசம்

ஒரு நாடகக் காட்சி

புத்தி சொல்லும் போது கும்பகர்ணனுக்கு ஏற்பட்டிருந்த விபீஷண ஆவேசம், ராவண கோபாவேசத்தை உச்ச நிலைக்குக் கொண்டு வந்து விட்டது.

* * *

சீதையைக் கவர்ந்து சிறை வைத்தது வீர தர்மத்திற்கு இழுக்காகு மென்று துணிந்தான் கும்பகர்ணன். இந்தத் துணிவில், தர்ம வீரனான விபீஷணனது கொள்கையுடன் ஒத்துப் போயிற்று கும்பகர்ணன் கருத்தும்.

ஆனால் எதிரிகள் படையெடுத்து வந்திருக்கும் இந்த நிலையில் சீதையை விட்டு விடுவதும் வீர தர்மத்திற்குக் குறைவேயாகுமென்று மந்திராலோசனை மன்றத்தில் தன் கருத்தை விளக்கினான் கும்பகர்ணன். இதைக் காட்டிலும் உயிரை விட்டுவிடலாமே என்றான்.

விபீஷணனோ, இந்த நிலையிலும் குற்றத்தை ஒப்புக் கொண்டு சீதையை விட்டு விடுவதே வீரம் என்றான், வெற்றி என்றான்.

இதைக் காட்டிலும் விஜயம் இல்லை யென்றே வற்புறுத்தினான்:

அசைவில் கற்பின் அவ்
அணங்கைவிட் டருளதி;
அதன்மேல்
விசையம் இல்லெனச்
சொல்லினன் அறிஞரின்
மிக்கான்.

அது கேட்ட கும்பகர்ணன், 'என்ன பேரறிவு! இதுவன்றோ உண்மையான வீர தர்மம்?' என்று உள்ளுக்குள்ளே வியந்திருக்க வேண்டும். விபீஷணனுடைய தர்மாவேசத்தைச் சகோதர பாசத்தால் ஒருவாறு உணர்ந்து கொண்டான் கும்பகர்ணன்.

வழக்கமாக உறங்கப் போகும் காலம் வந்து விட்டது. அந்த மயக்கத்திலே, 'அறிஞரின் மிக்கான்' தன் கொள்கையை விதைத்து விட்டான் கும்பகர்ணன் உள்ளத்தினுள்ளே.

இந்த நிலையில், கும்பகர்ண நித்திரை ஒருவகை வசிய நித்திரையாகப் பரிணமித்திருக்க வேண்டும். அந்த நித்திரையிலே 'அணங்கை விட்டிடுவாய்; அதன்மேல் விஜயம் இல்லை' என்ற விபீஷண வாக்கு ஒரு மந்திர வாக்கியமாகி உள்ளத்தின் ஆழத்தில் வேலை செய்து கொண்டிருக்க வேண்டும்.

அதனால்தான், 'போருக்குப் போ' என்று ராவணன் சொன்னதும் கும்பகர்ணன்,

ஆனதோ வெஞ்சமம்?
அலகில் கற்புடைச்
சானகி துயர் இ(ன்)னம்
தவிர்ந்த தில்லையோ?

என்று கதறுகிறான்.

வீரகண்டாமணி முழங்குவது போல்,

தையலை விட்(டு) அவன்
சரணம் தாழ்ந்து, நின்
மையறு தம்பியோ(டு)
அளவ ளாவுதல்
உய்திறம்......

என்று அடித்து முழக்குகிறான்.

இதற்குப் பின், விபீஷண ஆவேசம் கொஞ்சம் ஒய்ந்து, கும்பகர்ணன் தன் சொந்த நிலையிலும் ஆலோசனை சொல்லாமலிருக்கவில்லை. பந்தி பந்தியாக அரக்

கர்களைப் பலி கொடுப்பதைக் காட்டிலும், எல்லாரும் ஒரு சேரத் தாக்கிப் பார்க்கலாம் என்பதையும் வெளியிட்டு முடித்தானல்லவா ?

கோப எரிமலையாகக் குமுறிய ராவணனுக்கோ இப்போது காது கேட்கவில்லை. கண்ணும் பார்க்கவில்லை 'அருமைத் தம்பி, வீரத் தம்பி'யை.

எனவே சுடச் சுடப் பேசினான், ஏசினான். உள்ளத்தைப் புண்ணாக்கி அந்தப் புண்ணிலே கனலைச் சொரிந்தான்.

எனினும், கும்பகர்ணன் கோபங் கொள்ளவும் இல்லை; வெறுப்பு அடையவும் இல்லை. அண்ணனை அடி வணங்கி அபராத க்ஷாமணம் செய்து கொள்கிறான்:

அன்னது கண்(டு), அவன்
தம்பி யானவன்,
பொன்னடி வணங்கி, 'நீ
பொறுத்தி யால்' என,
வன்னெடுஞ் சூலத்தை
வலத்து வாங்கினான்,
இன்னம்ஒன்(று) உரைஉள(து)
என்னக் கூறினான்.

[அன்னது – அது. தம்பியானவன் – தம்பியான கும்பகர்ணன். பொறுத்தியால் – பொறுப்பாய். என – என்று வேண்டிக் கொண்டு. வன்னெடுஞ் சூலத்தை – வலிய நீண்ட சூலாயுதத்தை. வலத்து – வலப்புறத்திலே. வாங்கினான் – எடுத்து வைத்துக் கொண்டவனாய். உரை–வார்த்தை.]



'பொன்னடி வணங்கி' என்பதில், அண்ணன் மீது அன்பும் பக்தியும் சிறிதும் குறையாத தம்பியின் பொன்னுள்ளத்தைக் காணலாம்.

'பொறுத்துக் கொள்; போருக்குச் செல்வேன்' என்றுதானே கும்பகர்ணன் இப்போது சொல்ல வேண்டும்! ஆனால் 'பொறுப்பாய்' என்று சொல்லி விட்டுக் கும்பகர்ணன்,

வன்னெடுஞ் சூலத்தை
வலத்து வாங்கினான்

என்ற செயலால் போருக்குச் செல்லும் துணிவைப் புலப்படுத்துவது நாடகத் திறன்.

சூலத்தை வலப்புறம் கொண்டதும், அப்படியே புறப்பட்டுப் போய் விடாமல்,

இன்னம்ஒன்(று) உரைஉளது

என்ற பீடிகையுடன், கும்பகர்ண ராவணர்களுக்கு இடையே உள்ள சகோதர பாசத்தை ஒரு நாடகக் காட்சியாகத் தோற்றுவிக்கப் போகிறான் கவிஞன்.

* * *

விடை பெற்றுப் போருக்குச் செல்லும் கும்பகர்ணன் முதல் முதல் அண்ணனிடம் சொல்வது இது:

வென்(று) இவன் வருவன்
என்(று)
உரைத்திலேன்; விதி
நின்றது; பிடர்பிடித்(து)
உந்த நின்றது;

போன்றுவன்; பொன்றிஞல்,
பொலன்கொள் தோளியை
நன்றெனெ நாயக
விடுதி; நன்றரோ!

[இவண் — இங்கு. உரைத்திலேன் — சொல்ல மாட்டேன். உந்த—தள்ள. போன்றுவன் — இறந்து போவேன். பொலன் கொள் — அழகைக் கொண்ட. தோளியை — தோளையுடைய சீதையை. நன்று என — நன்று என்று எண்ணி. விடுதி—விட்டு விடுவாய். நன்று அரோ — இதுவே உனக்கு நலம் தருவதாகும்.]

சகோதர பாசம் கும்பகர்ணனை இப்போது ராவணன் பக்கமாகப் பலமாய் இழுத்த போதிலும், விபீஷணனது வசிய சக்தியை இன்னும் உதறிவிட முடியவில்லை.

அதனுல் தான், 'நான் வெற்றி பெற்று வருவேனென்று சொல்ல முடியாது' என்றும், 'இறந்து போவேன்' என்றும் சொல்லுகிருன். தருமமூர்த்தியான ராமனை வெல்லவே முடியாது என்பது விபீஷணன் கட்சியல்லவா?

'அண்ணு! உன்னை நான் குற்றஞ்சாட்டவில்லை. விதிதான் என்னைப் பிடர் பிடித்துத்தள்ளுகிறது; தள்ளி என்னைப் போர்க்களத்திற்குக் கொண்டு போகிறது' என்கிருன். ஆட்டை வெட்டுக் களத்திற்குக் கொண்டுபோவதுபோல் தள்ளிக்கொண்டு போகிறதாம் விதி.

அந்த விதிதான் ராவணனையும் இப்படி ஆட்டி வைக்கிறதாம்.

ஆட்டுவித்தால் ஆரொருவர்
ஆடா தாரே?

என்ற பெரியார் பக்தி வசமாகிச்சென்று விதியையும் முதுகு கண்டார். கும்பகர்ணனே விதிவசமாகச் சென்று படுகுழியை நோக்குகிருன்.

தான் இறந்த பிறகாவது சீதையை விட்டு விடுவது நல்லது என்கிருன். எப்படியாவது அண்ணன் பிழைத்துக் கொள்ள வேணுமே என்ற கவலை தான் இந்தத் தம்பிக்கு.

இதற்கு ராவணன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. இத்தனை பொன்னுள்ளம் படைத்த தம்பியை என்ன பாடு படுத்தி விட்டான்! சினத் தீ எப்படிப் புகைத்து விட்டது அறிவை!


* * *

கும்பகர்ணன் அதிகமாய்ப் பேசவில்லை. விடை பெற்றுப் புறப்பட வேண்டியது தானே!

'இற்றைநாள் வரைமுதல்
யான்முன் செய்தன
குற்றமும் உளஎனில்,
பொறுத்தி கொற்றவ!
அற்றதால் முகத்தினில்
விழித்தல், ஆரிய!
பெற்றனன் விடை'எனப்
பெயர்ந்து போயினுன்.

[இற்றை நாள் — இன்றைத் தினம். முதல் யான்முன் செய்தன — முன்னைநாள் முதல் நான் செய்தனவான. பொறுத்தி — பொறுப்பாய். கொற்றவ — கொற்றவனே; அரசனே. அற்றதால் — அற்றுப் போய் விட்டது. ஆரிய — பெரியவனே. பெயர்ந்து போயினுன் — புறப்பட்டுப் போனுன்.]

மரணமடையும் போது அற்பக் குற்றத்தையும் பெரிதாகக் கண்டு ஒப்புக் கொண்டு மன்னிப்பு வேண்டிக் கொள்ளும்படி மனச்சான்று தூண்டுகிறது நல்ல மனிதர்களை. குற்றம் செய்த நினைவே இல்லாத பெரியோரும் பிறர் குற்றமாகக் கருதக் கூடிய ஏதாவது ஒரு செயலுக்குத் தாங்கள் பொறுப்பாளியாக இருந்திருக்கக் கூடுமோ என்று எண்ணி, 'ஏதாவது



குற்றம் செய்திருந்தால் பொறுத்துக் கொள்ள வேணும்' என்று மரணத் தறுவாயில் சொல்வதுண்டு. இந்த நிலையை இப்போது கும்பகர்ணனிடம் காண்கிறோம்.

'குற்றமும் உள எனில் பொறுத்தி' என்று கூறுவதில் கும்பகர்ணன் தன்னுடைய சகோதர பாசத்தை மட்டுமல்ல, ராவண பக்தி நிறைந்த நெஞ்சை அப்படியே திறந்து காட்டுகிருனென்று தோன்றுகிறது.

சகோதரனுகப் பணி செய்யவில்லை; கிங்கரனுகப் போர் வீரனுகப் பணி செய்து வந்திருக்கிறுன். அந்தப் பணிகளில் ராவணனுல் ஒரு குற்றமும் காட்ட முடியாது. கும்பகர்ணனும் தன்னுடைய ராவண பக்தியிலோ, ராவண கைங்கரியத்திலோ, எவ்வளவோ நினைத்துப் பார்த்தாலும் குற்றம் காண முடியவில்லையாம்.

'இனிமேல் முகத்தில் விழிப்பதென்பது இல்லை' என்று கூறும் மன நிலையைப் பாருங்கள். விபீஷண பாசத்தால், அவன் கருதியபடி ராமனே ஜயிப்பான் என்ற நம்பிக்கை; ராவண பாசத்தால் ராவணனுக்காக உயிர்விடப் போகிறோம் என்ற திருப்தி.

இப்படி ராவணன் முகம் நோக்கிச் சொல்லி விட்டு, பனிச்சென்று தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு போர்க்களம் நோக்கிப் புறப்படுகிறுன் கும்பகர்ணன், சூலமும் கையுமாக. ராவணன் அந்தப் போக்கைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறுன்.

*　　*　　*

ராவணனுடைய உணர்ச்சிகளை வருணிப்பது எளிதா ! நம் கவிஞனே,

அவ்வழி இராவணன்
அனைத்து நாட்டமும்
செவ்வழி நீரொடும்
குருதி தேக்கினன்

[அவ்வழி — அப்போது. அனைத்து நாட்டமும் — கண்களில் எல்லாம். செவ்வழி நீரொடும் — நேரே வழிகின்ற கண்ணீரோடும். குருதி தேக்கினன் — இரத்தத்தையும் தேக்கிறுன்.]

என்று ஒரு சிறு செய்யுளின் பாதியில் காட்டி விடுகிறுன்.

ராவணனது இரத்தம் தேக்கிய கண்களிலும் கண்ணீரிலும் உள்ளத்தைப் புத்தகம் பார்ப்பது போல் பார்க்கிறோம்.

அப்போது அங்கே யிருந்த உறவினர்களின் உணர்ச்சி எப்படி இருந்திருக்கும்! ராவணனுடைய உணர்ச்சிகளையும் மற்ற உறவினர்களின் உணர்ச்சிகளையும், விதியானது பிடர் பிடித்துத் தள்ளிக் கொண்டு போகும் கும்பகர்ணன் போக்கையும் ஓர் அதிசயச் சித்திரமாகக் காட்டுகிறது ஒரே சிறு செய்யுள் :

அவ்வழி இராவணன்
அனைத்து நாட்டமும்
செவ்வழி நீரொடும்
குருதி தேக்கினன் ;
எவ்வழி யோர்களும்
இரங்கி ஏங்கினர் ;
இவ்வழி அவனும்போய்
வாயில் எய்தினன்.

[எவ்வழியோர்களும் — எல்லா உறவினர்களும். இரங்கி — இரக்கம்கொண்டு, இவ்வழி — இப்படி நிகழ்ந்து கொண்டிருக்கையில். வாயில் — நகர வாசல்.]

போர் என்ருல் சேனை வேண்டுமே என்ற எண்ணமும் இன்றியே கிளம்பிப் போய்க் கொண்டிருக்கிறுன் கும்பகர்ணன். ராவணன் தான், பெரும் படை தம்பியுடன் செல்ல வேண்டுமென்று கட்டளையிடுகிறுன்.

*　　*　　*

போர்ப் பறைகள் முழங்குகின்றன. கொடிகள் பறக்கின்றன. மோதும் கருவிகளிலிருந்தும் படை வீரர் கண்களிலிருந்தும் தீப்பொறிகள் பறக்கின்றன.

தேர்களும் குதிரைகளும் யானைகளும் நெருங்கிச் செல்கின்றன. கும்பகர்ணனும் தனக்குப் பிடித்த ஒரு தேரில் ஏறிக் கொண்டு போகிறுன்.

ராவணனது பாசம் நிறைந்த பார்வையைத் திரும்பிப் பாராமலே போய் விடுகிறுன் கும்பகர்ணன். உறவினர்களின் இரக்கத்திற்கும் ஏக்கத்திற்கும் அப்பால் போய் விடுகிறுன்.

இவ்வாறு முற்றுப் பெறுகின்றது பாசம் என்ற இந்த நாடகக் காட்சி. கும்பகர்ண சித்திரத்தை அந்த இதயத்திலிருந்து எவ்வளவு பிரமாதமாக, எவ்வளவு அதிசயமாக உருவாக்கி நடமாட விடுகிறுன் கவி!

கூடு விட்டுக் கூடு பாய்வது போல் ராவணன் உள்ளத்திலும் கும்பகர்ணன் உள்ளத்திலும் மாறி மாறிப் பாய்ந்து பாய்ந்து இரண்டு பாத்திரங்களையும் உருவாக்குகிறுன்; உரையாட விடுகிறுன்.

கும்பகர்ணன் செய்யப் போகும் போருக்கு, ராவணனுக்காகத் தன்னைப் பலி கொடுக்கப் போகும் அந்தப் பெருந் தியாகத்திற்கு எவ்வளவு வசீகரமான — நாடகப்பொலிவு நிறைந்த — தோற்றுவாய்!

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

109. இரு தம்பியர்

தோமரம் சக்கரம் சூலம் வேலாயுதம் மழுப்படை வில் வாள் உலக்கை முதலான போர்க் கருவிகளைக் கொண்டு போவது போல், படைவீரர்கள் வண்டிக் கணக்காக மாமிசத்தையும் கொண்டு போகிறார்கள்; கள்ளுக் குடங்களையும் கொண்டு போகிறார்கள்.

முறையாகச் சேமப் படைக்கலங்களை ஒன்று அழிய மற்றொன்றாக நீட்டிக் கொண்டேயிருக்க வேண்டுமல்லவா! அப்படியே பசி அறிந்து தாகம் அறிந்து மது மாமிசங்களையும் முடுகிப் போய்க் கொடுக்க வேண்டியது இவர்கள் கடமையாகும்.

உண்ட வண்ணம் களத்திற்கு வந்து கொண்டிருக்கும் இந்த விநோத 'மாமிச பர்வத'த்தை ராமன் பார்க்கிறான். 'கால் முளைத்த மலைதானோ!' என்று அதிசயிக்கிறான். இப்படி ஒரு ராட்சஸனை ராமன் இது வரையில் கண்டதில்லை.

'போர்க்கு நாளை வா' என்று அனுப்பி வைத்தானல்லவா! — அந்த ராவணன் தான், வானரர்களைப் பயமுறுத்த வேண்டுமென்று இப்படி ஒரு வேஷம் போட்டுக் கொண்டு வருகிறானோ? 'விபீஷணா! விரைவாகச் சொல்லு' என்கிறான் ராமன்.

இந்தப் பள்ளியெழுச்சியும், உறக்கமும்

'வெந்தவன் எனக்கு அண்ணன், ராவணனுக்குத் தம்பி' என்று சொல்லும் விபீஷணன், 'இப்போதுதான் துயில் உணர்ந்து எழுந்து வருகிறான்' என்பதையும் தெரிவிக்கிறான். 'இந்தப் பள்ளியெழுச்சி அபாயகரமானது; பயங்கரமானது' என்றும் சொல்லுகிறான்.

மகாவிஷ்ணு யோக நித்திரை நீங்கி எழுந்த காலத்தில் துஷ்ட அசுரர்கள் பட்டொழிவரல்லவா! இந்தக் கும்பகர்ண மூர்த்தி தன் மோக நித்திரை நீங்கி எழுந்தானென்றால் தேவர்கள் பட்டொழிவார்களாம்:

அவன் உணர்ந்(து) எழுந்த
காலத்(து), அசுரர்கள்
படுவர் எல்லாம்;
இவன் உணர்ந்(து) எழுந்த
காலத்(து) இமையவர்
படுவர், எந்தாய்!

[இமையவர் — தேவர்கள்.]

இந்தப் பீடிகையுடன் விபீஷணன் கும்பகர்ணனுடைய விசேஷ இயல்பாகிய உறக்கத்தைத் தெரிவிக்கிறான்:

ஆழி யாய்! இவன்
ஆகுவான்,
ஏழை வாழ்வுடை
எம்முனோன்
தாழ்வி லாஒரு
தம்பியோன்;
ஊழி நாளும்
உறங்குவான்.

[ஆழியாய் — கடலில் பள்ளிகொண்டிருக்கும் கடவுளின் அவதாரமான ராமனே. இவன் ஆகுவான் — இந்தக் கும்பகர்ணனானவன். ஏழை வாழ்வுடை — ஏழை வாழ்க்கையை யுடைய. எம்முனோன் — எமது அண்ணனான ராவணனுடைய. தம்பியோன் — தம்பியானவன். ஊழி நாளும் — ஊழிக் காலம் வரை.]

மூன்று லோகங்களுக்கும் ஒரு முதலாளியாக இருக்கும் ராவணேச்வரனை விபீஷணன்

ஏழை வாழ்வுடை
எம்முனோன்

என்று குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது.



நன்று தீது பாராமல் தின்று தின்று பாவ பொக்கிஷத்தைப் பெருக்கிக் கொண்டிருந்த விராதன் ராமனை நோக்கி,

அன்று மூலம்
ஆதியாய் !
இன்று காறும்
ஏழையேன்
நன்று தீது
நாடலேன்,
தின்று தீய
தேடினேன்

[அன்று மூலம் – அன்று முதல். ஆதியாய்–ஆதிப் பிரானின் அவதாரமாக வந்திருப்பவனே. இன்று காறும் – இன்று வரை.]
என்று கூறியது ஒப்பு நோக்கத் தக்கது.

அந்தக் காட்டாளுடைய ஏழை வாழ்வு தான் இந்த நாட்டுச் சக்ரவர்த்திக்கும் வாய்த்தது என்பது விபீஷணன் கருத்து.

நுண் ணுணர்(வு) இன்மை
வறுமை ; அஃதுடைமை
பண்ணப் பணைத்த
பெருஞ் செல்வம்

என்று பெரியோர் கூறுவர். அறம் உடைமையே செல்வம்; அது இன்மை ஏழைமை என்பது விபீஷணன் கொள்கை.

ஆறு மாசத்திற்குக் குறையாமல் தூங்கி ஒரு நாள் விழித்திருப்பான் கும்பகர்ணன் என்பது வால்மீகி கதை. அப்படி வாழ்க்கையின் பெரும் பகுதியையும் உறங்கிக் கழித்த கும்பகர்ணனை விபீஷணன்,

ஊழி நாளும்
உறங்குவான்

என்று இரங்கி ஏங்கிக் கூறினன்.

உறங்கி விழித்தாலோ அபார சக்தி என்கிறான் :

கழிந்த தீயொடு
காலையும்
பிழிந்து சாறுகொள்
பெற்றியான் !


[கழிந்த – மிகுந்த. காலையும் – காற்றையும். பெற்றி – வலிமை.]

கும்பகர்ணனுடைய உடல் வலிமையையும், மன வலிமையையும், தவ வலிமையையும், வரங்களின் வலிமையையும் ஒன்றன் மேலொன்றாக வானளாவ அடுக்கிக் காட்டுகிறான் :

ஊன்உ யர்ந்த
உரத்தினன் ;
மேல்நி மிர்ந்த
மிடுக்கினன் ;
தான்உ யர்ந்த
தவத்தினன்;
வான்உ யர்ந்த
வரத்தினன்.

[ஊன் – உடம்பு.]





உடம்பெல்லாம் சக்தி மயம். இந்த வஜ்ர தேகத்தின் சக்தியையும் மிஞ்சி விடுகிறது உள்ளத்தின் மிடுக்கு.

இவ்வளவு மன உறுதியையும் துணையாகக் கொண்டு எவ்வளவோ தவ வலிமையைச் சேமித்து வைத்திருக்கிருனும், எளிதில் அழிக்க முடியாத சேமப் படையாக.

இந்தத் தவத்தினுல் பெற்ற வர பலமோ வானம் போல் உயர்ந்தது என்கிருன் விபீஷணன்.

இப்படி ஒரு கும்பகர்ணன் இருந்தும் உலகம் பிழைத்திருப்பது அதிசயம் தான். இந்த அதிசய ரகசியத்தை,

உறங்க லால்உல(கு)
உய்ந்ததால்

என்று வெளிப்படுத்துகிருன் விபீஷணன்.

தர்ம வீரனின் பாசம்

இவன் பகைவர்களுடைய முகத்தையே பார்த்ததில்லையாம். இவனைக் கண்டதுமே முதுகு காட்டுகிருர்கள்!

தன் கொள்கைக் கிணங்கக் கும்பகர்ணன் அண்ணனுக்குப் புத்தி சொல்லிப் பார்த்தான்.

என்பதையும் விபீஷணன் நன்ருகத் தெரிந்து கொண்டிருக்கிருன். ஒற்றர் மூலமாகத் தெரிந்து கொண்டானென்று ஊகிக்கலாம்.

அதனுல் மூன்று செய்யுள்களில் கும்பகர்ணன் ராவணனுக்குச் சொன்ன புத்திமதியை வற்புறுத்திக் குறிப்பிடுகிருன். கும்பகர்ணனுடைய இந்தத் தருமபுத்தி விபீஷணனுக்கு ஒரு புதிய நம்பிக்கையை உண்டாக்குகிறது.

'தருமம் அன்று நீ செய்த காரியம் என்று இடிபோல் கொடிய ராவணனுக்கு இடித்து அறிவுறுத்தினன் என்னுடைய இந்த அண்ணன்' என்று குதூகலமாய்க் கூறுகிருன்.

> தருமம் அன்றுஇ(து)
> தான் இதால்

என்று அழுத்திச் சொல்லிவிட்டு,

> வரும்நமக்(கு)உயிர்
> மாய்வு

என்று பயமுறுத்தியும் பேசினன் என்கிருன்.

மறுத்த தமையனை வாய் வார்த்தையால் தண்டிப்பது போலவும் கடிந்து பேசிப் பார்த்தானும். கடைசியாக மனக் கசப்புடன் மரணமே மெய்யென்று வருகிருனும் :

> மறுத்த தன்முனை
> வாய்மையால்
> ஒறுத்தும் ஆவ(து)
> உணர்த்தினன் ;
> வெறுத்து மாள்வது
> மெய்என
> இறுத்து, நின்எதிர்
> எய்தினன்.

[தன்முனை – தன் தமையனை. வாய்மை –(இங்கே) வாய்ச் சொல். ஒறுத்தும் – கடிந்தும். இறுத்து–முடிவாகச் சொல்லி விட்டு.]

இப்படிச் சொல்லி முடித்த பின்பும் விபீஷணனுள்ளம் திருப்தி அடையவில்லை. மறுபடியும் 'கும்பகர்ணன் தரும நீதி பேசினன்' என்பதை ராமனுள்ளத்தில் பதிய வைக்க விரும்புகிருன். 'இந்த அண்ணனைக் கூடுமானுல் காப்பாற்ற வேண்டும்' என்பது ஆசை.

இந்த ஆசையையும், கும்பகர்ணனுக்காகத் துயரப்படும் துயரத்தையும், எல்லாவற்றுக்கும் ஒரு சாந்தியாக ராமனை வணங்குவதையும் இதோ பாருங்கள் :

> 'நன்றி தன்று
> நமக்கென,
> ஒன்றும் நீதி
> உணர்த்தினன்
> இன்று காலன்முன்
> எய்தினன்'
> என்று சொல்லி
> இறைஞ்சினன்.

[ஒன்றும் – பொருந்திய.]

ராமன் முன் வந்து கொண்டிருக்கும் கும்பகர்ணனை,

> இன்று காலன்முன்
> எய்தினன்

என்று ராமனிடத்திலேயே சொன்னுனென்ருல், இந்தப் பாசத்தை ராமன் முதலானேர் எவ்வளவு தெளிவாக உணர்ந்து கொண்டிருக்க முடியும் !

விபீஷணனை ஆசாபாசங்கள் அற்ற ஒரு பளிங்குச் சிலை யென்று கருதுவது தவறு. கம்பசித்திரத்தில் விபீஷணனும் உணர்ச்சி நிறைந்தவன்; சகோதர பாசம் உள்ளவன் தான்.

ஆனுல் தருமத்தின் மீதுள்ள காதலால் உள்ளத்தைப் பண்படுத்திப் பண்படுத்தி மஹாத்மா ஆகி விட்டான்.

விபீஷணனுடைய மன நிலையை ராமன் நன்குணர்ந்து கொண்டான் என்பதைச் சொல்லவா வேண்டும்! சுக்கிரீவனுக்கே இது நன்கு விளங்குகிறது.

விபீஷணனை அடைக்கலமாக அங்கீகரிக்கக்கூடாது என்று தடுத்தவன் இப்பொழுதோ விபீஷணனுக்காகக் கும்பகர்ணனையும் சேர்த்துக் கொள்ள விரும்புகிருன்.

விபீஷணனை ராமன் அடைக்கலமாக அங்கீகரித்த பின் சுக்கிரீவனை நோக்கி, 'நீயே விபீஷணனை அழைத்து வா' என்ருன். அப்போது சுக்கிரீவனும் விபீஷணனும் தழுவிக் கொண்டனர். அது முதல் இருவரும் தோழராகி விட்டனர் எனலாம்.

'இந்த மஹாத்மாவையா நாம் சந்தேகப் பட்டோம் !' என்று மனச் சான்று கண்டித்திருக்க வேண்டும். அதற்கு ஒரு பிராயச்சித்தம் போல் உடனே 'சிபார்சு' செய்கிருன் சுக்கிரீவன் கும்பகர்ணனுக்காக.

இரு தம்பியர் உள்ளமும் ஒத்துப் போவதில் தான் ராமனுக்கு என்ன மகிழ்ச்சி !

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

110. கும்பகர்ண சரணாகதியா?

விபிஷண சரணாகதி ராமாயணத்தின் உயிர்நிலைக் கட்டங்களில் ஒன்று. சரணாகதி நூலாகிய ராமாயணத்தின் இதயம் இதுவே என்று கருதுவோரும் உண்டு.

விபிஷண சரணாகதி போல் கும்பகர்ண சரணாகதியும் நிகழ்ந்திருந்தால் ராமாயணத்தின் போக்கு—இறுதிப் பகுதியில்—எப்படி மாறிப் போயிருக்கும்! ஆனால் இந்தச் சரணாகதியை யாராவது எதிர்பார்த்திருக்க முடியுமா!

'கும்பிட்டு உய்தொழில்... உம்பிக்கும் உனக்குமே கடன்' என்றானே ராவணன் கோபமாக; அவன் உள்ளபடியே விபிஷண சரணாகதி போல் கும்பகர்ண சரணாகதியும் சாத்தியம் என்று நம்பினானா!

ராவணனுக்குத் தரும புத்தி சொன்ன அண்ணனைக் குறித்து,

இன்று காலன்முன்
எய்தினான்

என்று வருந்தினானே விபிஷணன், இவன்தான் கும்பகர்ண சரணாகதியை எதிர்பார்த்தானா!

'இவனை இன்று கொன்று ஒரு பயனும் இல்லை; கூடுமேல் கூட்டிக் கொண்டு நின்றது புரிதும்' என்றானே சுக்கிரீவன், அவன்தான் எதிர்பார்த்தானா கும்பகர்ண சரணாகதியை!

சுக்கிரீவன் அபிப்பிராயத்தை ஒப்புக் கொண்டு 'அதுவே நலம்' என்றானே ராமன், இவன்தான் நம்பி விட்டானா கும்பகர்ணன் சரணாகதி செய்யக் கூடியவன் என்று!

* * *

'இது நல்லது' என்று நாதன் கூறி,

ஏகுதற்(கு) உரியார்
யாரே?

என்று ஒரு கேள்வியும் கேட்கிறான்.

'அனுமன் அல்லனேல் அங்கதன்' என்று தேர்ந்தெடுத்து ராவணனிடம் தூது அனுப்பிப் பார்த்தான் ராமன். இப்போதோ தூதனைத் தானாகத் தேர்ந்தெடுக்கவில்லை.

தூதனே முன் வந்து, 'என்னை அனுப்பிவைக்க வேணும்' என்று வேண்டிக் கொள்கிறான். ராமன் விடை தருகிறான் :

'ஏகுதற்(கு) உரியார்
யாரே?' என்றலும்,
இலங்கை வேந்தன்
'ஆகில், மற்(று) அடிய-
னேசென்(று), அறிவினால்
அவனை உள்ளம்
சேகறத் தெருட்டி,
ஈண்டுச் சேருமேல்,
சேர்ப்பன்' என்றான்;
மேகம்ஒப் பானும்,
'நன்று, போகெ'ன்று
விடையும் ஈந்தான்.

[இலங்கை வேந்தன் – (இங்கே) விபிஷணன். ஆகில் – அப்படியானால், சேகுஅற – ஐயம் நீங்க. தெருட்டி – தெளிவித்து. ஈண்டு – இங்கே. சேருமேல் – சேர்வானேயானால். போகென்று–போக என்று.]

விபிஷணன் வாக்கிலே கும்பகர்ணனை வழிப்படுத்துவதிலுள்ள கஷ்டம் தொனிப்பதுடன், அவனும் தன்னைப்போல் சரணாகதி செய்வது நல்லது என்ற ஆசையும் ஆத்திரமும் புலனாகின்றன.

கும்பகர்ணனும் ராமனைச் சேர்ந்து கொண்டால் தனக்கு லங்கா ராஜ்யம் இல்லாமற் போய்விடுமே என்ற கவலைக் குறி சிறிதும் காணப்படவில்லை, இந்த விபீஷணன் குரலிலும் முகத்திலும்.

இந்தப் பாட்டில் ராமனை 'மேகம் ஒப்பான்' என்று கவிஞன் சுட்டிக்காட்டுவது ஊன்றி நோக்கத் தக்கது. 'தான் அறப் பெய்து மாயும்' மேகம் போல நிற்கும் தியாகமூர்த்தியை நாமும் கண்டுகொள்கிறோம்.

ராவணனுக்கே 'இன்று போய் நாளை வா' என்று அருள் புரிந்து தன்னுடைய ராஜ்யத்தையும் வழங்கச் சித்தமாகி விட்ட 'கோசல நாடுடை வள்ள'லுக்கு அத்தகைய வண்மையைக் கும்பகர்ணன் விஷயத்தில் காட்டுவதுதான் கஷ்டமா!

* * *

வானர சமுத்திரத்தை நீந்தி விபீஷணன் ராட்சஸப் பெருங்கடலைச் சேர்கிறான். உடனே படையைச் சேர்ந்த பணியாளர்கள் கும்பகர்ணனிடம் ஓடி, 'ஐயா, விபீஷணன் விரைவாக உம்மிடம் திரும்பி வந்துவிட்டான்!' என்று செய்தி சொல்லுகிறார்கள்.

தங்கள் கட்சிக்குத் திரும்பி வந்து விட்டதாகவே இந்தப் பணியாளர்களின் எண்ணம். ஏன், கும்பகர்ணனும் இப்படித்தானே நினைக்கப் போகிறான்!

ஆனால், விபீஷணன் வந்த செய்தி கேட்டதும், மந்திராலோசனை மன்றத்திலே பிரிந்த அருமைத் தம்பியை— 'போய்விட்டான், போயே விட்டான்' என்று கருதிய தம்பியை — இவ்வளவு விரைவாக மறுபடியும் சந்திக்க நேர்ந்ததே என்ற களிப்பே தான் கும்பகர்ணனை ஆட்கொள்ளுகிறது.

இவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்கும் அண்ணனைத் தம்பி நிலத்தில் விழுந்து வணங்குகிறான்:

சிந்தையால் களிக்கின்—
றுன் தன் செறிகழல்
சென்னி சேர்த்தான்.

[செறி கழல் — நெருங்கிய வீரக் கழலை அணிந்த பாதங்களை. சென்னி — தலை.]



அண்ணனுடைய பாதங்கள் தன் தலை மீது படும்படி விழுந்து வணங்கிய தம்பியை அண்ணன் எவ்வளவு அன்புடன் தழுவிக் கொள்கிறான்,

மோந்(து)உயிர் மூழ்கப்
புல்லி, —

[மோந்து – உச்சி மோந்து. புல்லி – தழுவி.]

— தன் அன்பை வெளியிடுகிறான் கும்பகர்ணன்.

அன்புக் கண்ணீர் அதி விரைவில் சோகக் கண்ணீராகி விடுகிறது. 'இந்தக் களிப்பெல்லாம் உன்னை இப்படிப் பார்ப்பதற்காகவா? இல்லை, இல்லை; நீ ஒருவனுவது எங்களை விட்டு விலகிப் பிழைத்துப் போனாய் என்றல்லவா மனம் களிக்கின்றது! நீயோ அந்தக் களிப்பைக் கெடுத்து விடுகிறாயே!' என்கிறான்.

இந்த நினைப்பிலே கண்ணீர் பெருகி வழிகிறது. சொல்லால் சொல்லி முடிக்க முடியாததையும் சொல்லி முடிக்கிறது இந்தக் கண்மழை:

'சிந்தனை முழுதும்
சிந்தத் தெளிவிலார்
போல மீள
வந்ததென் தனியே
என்றான்?' மழையின் நீர்
வழங்கு கண்ணான்.

[மழையின் நீர் – மழை போல நீரை.]

விபீஷணனுடைய மேதையை ஒரு கவிஞருடைய மேதாவிலாசத்துடன் ஒப்பிடுகிறான் கும்பகர்ணன்.

கவிஞரின் அறிவு
மிக்காய்!

[கவிஞரின் – கவிஞர் போல.]

என்று நெஞ்சு குளிர அழைக்கிறான் அருமைத் தம்பியை.

தர்க்க ரீதியில் அறிவைச் செலுத்தி உழைத்து உழைத்து உண்மை காண்பவன் விஞ்ஞானி யென்றால், உள்ளொளியால் உள்ளத்தில் உண்மை காண்பவனல்லவா கவிஞன்?

'அத்தகைய மேதாவிக்கும் எங்களுக்கும் என்ன உறவு!' என்று கூடக் கேட்கத் துணிகிறது கும்பகர்ணன் உள்ளம்:

கவிஞரின் அறிவு
மிக்காய்! காலன்வாய்க்
களிக்கின் றேம்பால்,
நவையிலை, வந்த(து)
என், நீ? அமுதுண்பாய்
நஞ்சுண் பாயோ?

[களிக்கின்றேம்பால் – களிக்கின்ற எங்களிடம். நவையிலை நீ – குற்றமற்றவனாகிய நீ.]

'பாம்பின் வாய்த் தேரை, மேலேயிருந்து சொட்டிய தேன் துளியை உண்டு களிப்பது போல் அரக்கர்களாகிய நாங்களும் காலன் வாயில் இருந்த வண்ணம் களித்துக் கொண்டிருக்கிறோம்' என்கிறான். 'அமுதம் என்று நஞ்சை உண்ணுகிறோம்' என்றும் குறிப்பிடுகிறான்.

ராவணனுடைய வீரக் குறைவான செயலால் குலப் பெருமை அழிந்து விட்டது என்கிறான். 'இந்த மரபு, விபீஷணா! உன்னைக் கொண்டே பேறு பெற்றது என்று மகிழ்ந்திருந்தேன். ஐயோ, திரும்பி வந்து விட்டாயே!' என்று மனம் உளைந்து வாய் விட்டுக் கதறுகிறான்.



ஒருவேளை ராவண பயத்தாலோ, வேறு காரணத்தாலோ ராமலட்சுமணர் விபீஷணனைக் கை விட்டிருக்கலாகாதா? உயிர் துறந்தாலும் அபயம் அடைந்தவனை அந்த அறப்

பெருந் துணைவர்கள் துறக்க மாட்டார்கள் என்கிறான் கும்பகர்ணன். இந்த அளவிற்கு அவர்களை இவனும் தெரிந்து கொண்டிருக்கிறான்.

தங்களுடைய கட்சியைத் 'தோற்ற' கட்சி என்கிறான். ஏன்!

ஏற்றிய வில்லோன்,
யார்க்கும் இறையவன்,
இராமன் நின்றான்;

மாற்றரும் தம்பி
நின்றான்; மற்றையோர்
முற்றும் நின்றார்;

கூற்றமும் நின்ற(து);
எம்மைக் கொல்லிய,
விதியும் நின்ற!

[ஏற்றிய — நான் ஏற்றிய. மாற்றரும் தம்பி — விலக்குதற்கு அரிய வலிமை படைத்த லட்சுமணன். மற்றையோர் முற்றும் — மற்றையோராகிய வானரர்கள் நிரம்பவும். கொல்லிய — கொல்லும் பொருட்டு.]

எத்தகைய ஞானத் தெளிவுடன் கும்பகர்ணன் பேசுவது போலத் தோன்றுகிறது! விபீஷணனது அகக் கண்ணை இசைத்துக் கொண்டே பார்க்கிறானோ! விபீஷணன் மீதுள்ள பாசம் உண்மையாகவே தர்ம பாசமாகி விட்டதா!

* * *

ராட்சஸக் கண்கள் ஏதோ தீர்க்க திருஷ்டி பெற்றுத் திரையை ஊடுருவிக் கிழிப்பது போலவும் நோக்குகின்றன:

ஐய! நீ அயோத்தி
வேந்தற்(கு) அடைக்கல —
மாகி ஆங்கே

உய்கிலை என்னின்,
மற்(று) இவ் அரக்கராய்
உள்ளோம் எல்லாம்

எய்கணை மாரி —
யாலே இறந்துபாழ்
படுதும்; பட்டால்,

கையினால் என்நீர்
அள்ளிக் கடன்கழிப்
பாரைக் காட்டாய்!

[அயோத்தி வேந்தற்கு — அயோத்தி வேந்தனாகிய ராமனுக்கு. உய்கிலை என்னின் — உயிர் பிழைத்து வாழவில்லை என்றால். எய் கணை மாரியாலே — ராமன் எய்கின்ற அம்பு மழையாலே. இறந்து பாழ் படுதும் — இறந்து அழிந்து போவோம். பட்டால் — அப்படி இறந்தழிந்தால். என் நீர் — எள்ளோடு கூடிய நீர்.]

'எள்ளும் தண்ணீரும் இறைப்பதற்கு ஆள் இல்லாமல் போய் விடுமே, விபீஷணா நீயாவது பிழைத்துப் போகா விட்டால்!' என்பது கும்பகர்ணன் கவலை இப்போது.

கடைசியாகக் கும்பகர்ணன் விபீஷணனை முகம் நோக்கி, 'நீ இலங்கைக்கு வர வேண்டியது தான். ஆனால் இப்போது எங்களுடன் சேர்ந்து கொள்ள வந்துவிட வேண்டாம் என்று தான் சொல்லுகிறேன்' என்கிறான்.

'இந்த ராட்சஸப் புலையர் கூட்டமெல்லாம் மாண்ட பின் ராமனோடு வரவேண்டும். வந்து நீ இந்த இலங்கை அரசுச் செல்வத்தை அனுபவிக்க வேண்டும்' என்கிறான். 'அது விரைவில் நடைபெற வேண்டும்; ஆகவே நீ இப்போது விரைவாகத் திரும்பிப் போ!'

* * *

இப்படிக் கும்பகர்ணன் சொல்லி முடிப்பதும், அது கேட்ட விபீஷணன், 'ஒரு காரியம் இருக்கிறது' என்று வெகு சுருக்கமாகப் பதில் சொல்லி, வந்த காரியத்தை விவரமாய்ச் சொல்ல அனுமதி பெற்றுப் பேசத் தொடங்குவதும், இந்தப் பாட்டிலே:

'வருவதும் இலங்கை
மூதூர்ப் புலையெலாம்
மாண்ட பின்னைத்

திருவுறை மார்ப
னோடும் புகுந்துபின்,
என்றும் தீராப்

பொருவருஞ் செல்வம்
துய்க்க; போதுதி
விரைவின்' என்றான்.

'கருமம் உண்(டு) உரைப்
ப(து)'
என்றான்; 'உரை' எனக்
கழற லுற்றான்.

[திருவுறை — விஜய லட்சுமி உறையும். பொருவரும் — ஒப்பற்ற. துய்க்க — அனுபவிக்க. போதுதி விரைவின் — விரைவாகப் போ. கழறலுற்றான் — உறுதி கூறத் தொடங்கினான்.]

கும்பகர்ண சரணாகதிதான் விபீஷணன் இடித்துரைக்கும் உறுதி. ஆனால் இது பலிக்குமா!